# மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.


| மலர் 2 | மாதமிருமுறை ☆ 15-6-53 ★ விலை அணா 4 | இதழ் 4 |
|---|---|---|


அழுத கண்ணீர்—கூரிய வாள்!

# அட்டைப்பட விளக்கம்

நாடாள வந்தவன் கொடுங்கோலனாக மாறிவிட்ட நேரத்திலெல்லாம், அவனது கொடுமைக்கு ஆளாகும் குடிமக்கள், குமுறும் எரிமலைகளாக மாறி வெறுப்புக் குழம்பைக் கக்கியிருக்கிறார்கள்; அந்தக் குழம்பிலே கொடுங்கோலர்கள் வெந்து போயிருக்கிறார்கள்! இது உலக வரலாறு காட்டும் பாடம்!

குடிகளின் நலனை ஓம்பாமல், குடிகளிடத்து அமைதியைக் கெடுத்து, அவர்களை அடிமைகொண்டு-அல்லற்படுத்தி அலக்கழித்து, அவர்கள் மீது ஆணவ ஆதிக்கம் செலுத்தித் தன்னலத்தையே ஓம்பிவந்த ஆளவந்தார்களில் பலரும், இறுதியில், செல்வம் இழந்து, சீராட்சி இழந்து, செருக்கிழந்து, சிறப்பிழந்து, பெயரிழந்து, பொலிவிழந்து, வளம் இழந்து, வாழ்விழந்து மடிந்து போயிருக்கிறார்கள்.

**"கொடுங்கோல் மன்னன் வாழும் நாட்டை விடக் கடும்புலி வாழும் காடே நன்று"** என்று பலர் சொக்கரித்து எழும்பியிருக்கிறார்கள். அழுத்தப்படுகின்ற பந்து உந்துவதைப்போல், தாக்கப்படுகின்ற பூனை புலியாக மாறுவதைப்போல், மிதிக்கப்படுகின்ற புழு துள்ளிக் கடிப்பதைப்போல், கொடுங்கோன்மைக்கு ஆட்பட்ட குடிமக்கள் கண்ணீர் வடித்துக் கொதித்தெழத் தொடங்கிவிடுவார்களேயானால், அந்த மக்களாற்றலை அடக்கி நிறுத்தும் சக்தி, இந்த அவனியில் எங்கும் இருக்கமுடியாது. இதனால்தான் '**ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும்**' என்ற பழமொழியும் நாட்டில் நடமாடத் தொடங்கிற்று.

கொடுமைக்குட்பட்டுத், துன்பப்பட்டுத், துன்பத்தைத் தாங்கமுடியாது வருந்தி, அழுது, கண்ணீர் வடித்துக், கொதித்து எழுந்த மக்கட் கூட்டந்தான் இங்கிலாந்திலும், பிரான்ஸிலும், அமெரிக்காவிலும், மெக்ஸிகோவிலும், ரஷ்யாவிலும், சீனாவிலும் புரட்சிகளை உண்டாக்கிற்று.

குடிமக்கள் கொதித்தெழுந்தால் ஆளவந்தாரின் வளமும், வலிவும் அழிந்துபடும் என்ற கருத்தை, வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தெளிவுபட வரையறுத்துக் கூறியுள்ளார். அந்தக் கருத்தைத்தான் ஓவியவல்லுநர் பாலு பிரதர்ஸ் படமாகத் தீட்டியுள்ளார்கள். அந்தப்படந்தான் அட்டையில் காணப்படுவது.

அல்லற்பட் டாற்றா தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை (555)

அல்லற்பட்டு- (அரசன் செங்கோல் செலுத்தாமையால் குடிகள்) துன்பமுற்று, ஆற்றாது-அதனைப் பொறுக்கமாட்டாது, அழுதகண்ணீரன்றே - அழுத கண்ணீரல்லவோ, செல்வத்தை- (அரசனது ஆட்சி வலிவையும்) வளத்தையும், தேய்க்கும் படை-தேய வைக்கும் கருவியாகும்.

இரும்பைச் சிறிது சிறிதாகத் தேய்க்கும் அரம் போல, கொடுங்கோலரின் ஆட்சியைக் குடிமக்களின் அழுத கண்ணீர் தேயவைக்கும் என்பது இதன் கருத்து.

ஆடுமாடிழந்து, வீடுவாசலிழந்து, உற்றார் உறவினரிழந்து, நாடுநகரமிழந்து, கண்ணீரும் கம்பலையுமாய் அல்லற்பட்டுஉழலும் குடும்பம் ஒன்றின் நிலையே படத்தில் இரக்கக் காட்சியாய்த் தீட்டப்பட்டிருக்கிறது. கொடுங்கோலாட்சியை அழிக்கும் சிறந்த கருவியான ஆற்றாது அழுத கண்ணீர் ஓவியமாகிப் பேசுகிறது!

---


# நம் நாடு

(தி. மு. க. தின இதழ்)

ஆசிரியர் :-அறிஞர் சி. என். அண்ணாதுரை எம்.ஏ.

15-6-53 முதல் வெளிவருகிறது!

★

கழகம்

வளம்பட-வளர-வாழ கழக ஏடாக மலர்கிறது!

★

ஆதரவு காட்ட அனைவரும் முந்துக!

★

எல்லா ஊர்களிலும் முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர் தேவை!

★

## சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ... | ரூ. 24—0—0 |
| ஆறு மாதம் ,, | ... | ரூ. 12—0—0 |
| மூன்று மாதம் ,, | .... | ரூ. 6—0—0 |
| ஒரு மாதம் ,, | — | ரூ. 2—0—0 |

தனி இதழ் அணா ஒன்று

விபரங்கட்கு :—

'நம் நாடு' - அறிவகம்

இராயபுரம் : : சென்னை-13.

## மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

**15—6—53 திங்கட்கிழமை**

# எதிர்ப்பல்ல - - - - தொல்லை தவிர்ப்பே!

**மே** திங்கள் 31-ம் நாளன்று, அரக்கோணத்தில் கூடிய திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழு, இறந்தகால நிகழ்ச்சிகளை ஆராய்ந்தறிந்து, எதிர்கால நிலைமையை முன்னிறுத்திப் பார்த்துச் சிலபல முடிவுகளைச் செப்பனிட்டுக்கொண்டுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றங் கொண்ட நாளிலிருந்து, கழகத்தில் பெருமையோடும் பூரிப்போடும் கூறிக்கொள்ளக் கூடிய பலவற்றுள், முக்கியமான ஒன்றாகக் கருதப் படவேண்டியது, 'ஜனநாயக மணம்' முழு ஆற்றலோடு கமழ்ந்து வருகிறது என்பது தான்.

திராவிட முன்னேற்றக் கழகத்தில், 'தலைமை' என்று வேறு பிரித்துக் காட்டக் கூடிய பிரிவு ஒன்றும், தலைமையிடும் கட்டளைகளை வாய்பேசாமல் ஏற்று நடத்தித் தீரவேண்டிய அவசியத்திற்குள்ளாக்கப்பட்டுத், தனியே வேறுபிரித்துக் காட்டக் கூடிய வகையில், 'தொண்டர்' பிரிவு என்று மற்றொன்றும் இருந்து, பணியாற்றி வருவதாகச் சிலர் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். அப்படிச் சிலர் எண்ணுவது கழகத்தின் ஆக்கத்திற்கு ஊறு பயக்கும் ஒன்று என்றோ, அல்லது கழகத்தின் அழிவிற்குத் துணைசெய்யும் ஒன்று என்றோ கருதாததால், கழகம் அதுபற்றிக் கவலைப் படாமல், அதனை அலட்சியப் படுத்தும் போக்கிலேயே கவனம் செலுத்தி வருகிறது. நாடு நகரங்கள், பட்டிதொட்டிகள், மூலை முடுக்குகள் ஆகிய இடங்களிலெல்லாம் கொள்கைகளைப் பரப்புவதும், ஆக்கப் பணிகள் செய்வதும், கழகத்திற்கு ஆதரவு தேடுவதும் ஆன சீரிய தொண்டினை யார்யார் செய்கிறார்களோ, அவர்கள் ஒருங்குகூடி எடுக்கும் முடிவுகள்தாம், பொறுப்பாளர்களால் ஏற்று நடத்தவேண்டிய கடப்பாடுடையவைகளாக இருந்து வருகின்றன. இந்த நிலையைக் கழகத்தோடு நெருங்கிய தொடர்புடையவர்கள் மட்டுமே நன்றாக உணர்வார்கள்.

இந்த அடிப்படையில் நின்றுதான், தங்கள் தங்கள் வட்டாரச் சூழ்நிலைகளோடு நெருங்கிய தொடர்பு கொண்ட மாவட்டப் பிரதிநிதிகள், அரக்கோணத்தில் பொதுக்குழுவாகக் கூடி, நிலைமைகளை விளக்கி, வழிவகைகளைக் கூறி, வேண்டிய முடிவுகளை எடுத்துச், செயலாற்றலுக்காக முன்வைத்தார்கள். அதிலே ஒன்றுதான் கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் முன்னேற்றக் கழகத்துக்கும் உள்ள தொடர்பு பற்றியதாகும்.

கம்யூனிஸ்டுக் கட்சியின் இன்றைய போக்கு, கழகத்தின் தோழமையை இழந்துவிட அது விரும்புவதாகக் காட்டுவதுபோல் இருப்பதால், கம்யூனிஸ்டுச் கட்சியின் போக்கு **விரும்பத்தக்க முறையில் மாறுகிறவரை,** அக்கட்சியுடன் தொடர்பு வைத்துக் கூட்டுக் கூட்டம் நடத்துவதையும், கூட்டணி அமைப்பதையும் கழகம் நிறுத்திக்கொள்வது என்னும் கருத்துப்பட தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. தீர்மானம் புதிய கொள்கையையோ, திட்டத்தையோ தரவில்லை; ஒரு அருவருப்பான நெருக்கடியைத் தவிர்க்கிறது.

கம்யூனிஸ்டுக் கட்சியோடு தொடர்பை **நிறுத்திக் கொள்வது** என்பதுதான் முடிவேயொழிய, கம்யூனிஸ்டுக் கட்சியை **எதிப்பது** என்பதல்ல. **நண்பன், பகைவன்** என்ற இரண்டு நிலைகளுக்கு இடையில், ஒருநிலை உண்டு, ஆதரிக்கவேண்டிய அவசியமும் எதிர்க்க வேண்டிய அவசியமும் அற்றநிலை. அதை நல்லதமிழிலே அழைக்க வேண்டுமானால் **நொதுமலன்** என்று அழைக்கலாம். திராவிட முன்னேற்றக் கழகம் கம்யூனிஸ்டுக் கட்சியைப் பொறுத்து **நொதுமலன்** நிலையையே தற்பொழுது கையாள விரும்புகிறது. திராவிட முன்னேற்றக் கழகம் **நண்பன்** நிலைக்குச் செல்லுவதும், **பகைவன்** நிலைக்குத் திரும்புவதும், கம்யூனிஸ்டுக் கட்சியின் எதிர்கால நடவடிக்கையைப் பொறுத்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தின்

முடிவு கம்யூனிஸ்டு கட்சிக்கு எதிர்ப்பைத்தர அல்ல; சங்கடமான சில நெருக்கடிகளைத் தவிர்க்க என்பதை முதற்கண் உணரவேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்த முடிவு **கம்யூனிஸத்திற்கு எதிர்ப்பு** என்று யாரேனும் முடிவுகட்ட முன்வரின், அவரின் நோக்கம்-போக்கு ஆகியவையிலே 'கடும் நஞ்சு' கலந்திருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

**கம்யூனிஸம்** என்பது ஒன்று; **கம்யூனிஸ்ட் கட்சி** என்பது மற்றொன்று. கம்யூனிஸத்தை ஆதரிப்பது-எதிர்ப்பது என்பது ஒன்று: கம்யூனிஸ்டுக் கட்சியை ஆதரிப்பது-எதிர்ப்பது என்பது மற்றொன்று. கம்யூனிஸத்தின் முடிவை நோக்கமாகக் கொள்வது ஒன்று; அந்த முடிவை அடைவதற்கான வழியைக் கடைப்பிடிப்பது மற்றொன்று. இந்த இரு வேறு தன்மைகளை ஒன்றாக்கிக் கணக்கிடுவது நடைமுறைக்குப் பொருந்தி வருவதாகாது. கம்யூனிஸக் கொள்கையை ஆதரிக்கும் ஒருவன் கம்யூனிஸ்ட் கட்சியில் முழுக்க முழுக்கத் தொடர்பு கொண்டிருக்க வேண்டுமென்பதல்ல; கம்யூனிஸ்டுக் கட்சியில் சேராமலேயே ஒருவன் கம்யூனிஸக் கொள்கையை நோக்கமாகக் கொள்ளலாம். கம்யூனிஸ்ட் கட்சியின் தற்போதைய போக்கும், நடவடிக்கையும் ஒத்து வரவில்லை என்று ஒதுங்கினால், கம்யூனிஸக் கொள்கையிலிருந்தே ஒருவன் விலகுகிறான் என்பது எப்படிப் பொருள்படும்? பர்மாவில் பல கம்யூனிஸ்டுக் கட்சிகள் கொள்கையில் ஒரே நோக்கங் கொண்டு போக்கில் நடவடிக்கையில் வேறுபட்டு நிற்கவில்லையா? எனவே, கம்யூனிஸ்ட் கட்சியின் கூட்டுத் தொடர்பிலிருந்து விலக்கிக் கொள்வது என்று கழகம் முடிவு செய்தால், அது **கம்யூனிஸத்தை எதிர்ப்பதாகும்**, என்று பொருள் கொண்டு உரைப்பது வேறு எதையோ எதிர்பார்த்து ஏற்றப்படும் ஒரு கறையாகக் கருதப்படுமேயொழிய, நேர்மையுரையின் பாற்பட்டதாகக் கொள்வதற்கில்லை.

மேலும் திராவிட முன்னேற்றக் கழகத் 'தலைமை'க்கும், கம்யூனிஸ்டுத் தலைமைக்கும் இது வரையில் நேரடியான அதிகார பூர்வமான கடிதப் போக்குவரத்தோ, பேச்சு வார்த்தையோ, ஒப்பந்தமோ எதுவும் நடைபெற்றதில்லை. திராவிட முன்னேற்றக் கழகத் 'தலைமை'யிலிருந்து இது வரையில் ஆதரவு கோரியோ, ஆக்கந் தேடியோ, உறவு கொண்டாடியோ, தொடர்பு வேண்டியோ கடிதப் போக்குக் கம்யூனிஸ்டுத் தலைமைக்குச் சென்றதில்லை. ஏற்பட்ட—அனுமதிக்கப்பட்ட தொடர்பெல்லாம் ஆங்காங்குள்ள தி. மு. க. கிளைகளுக்கும், கம்யூனிஸ்ட் கட்சிக் கிளைகளுக்கும்தாம்.

கம்யூனிஸ்டுக் கட்சியின் கிளைகளிலுள்ளவர்கள் திட்டம் கொள்ளும் முறையும், உறவு கொண்டாடும் வகையும், அணுகும் பண்பும், கழகக் கொள்கைகளை விமர்சனம் செய்யும் தன்மையும் தோழமை கொள்ளக் கூடியனவாகவும், செயலாற்றலில் பொருந்தி வரக் கூடியனவாகவும், இருப்பதால் அவர்களோடு கூட்டு அணி ஏற்படுத்திக் கொள்ள முயலுதல் தவறு ஆகாது என்ற கருத்தை, திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளைகளிலுள்ளோர் அனைவரும் ஒரு முகமாக வைத்தார்கள். அந்தக் கருத்துக்கேற்ப, கம்யூனிஸ்டு கிளைகளோடு, தேவைப்பட்ட இடத்தில் கழகக் கிளைகள் கூட்டணி அமைத்துக் கொள்ளலாம் என்ற முடிவு ஈரோடு பொதுக்குழுவில் எடுக்கப்பட்டது. அந்த முடிவே அரக்கோணம் பொதுக்குழுக் கூட்டம் வரையில் நடைமுறையில் கையாளப்பட்டு வந்தது.

இரண்டு கட்சிகளின் கொள்கைகளும், திட்டங்களும் அடிப்படையில் வேறு வேறாகக் காணப்பட்டாலும், பிற்போக்கு முதலாளித்துவ காங்கிரஸ் ஆட்சியை எதிர்த்தல், ஜீவாதார உரிமைக்குப் போராடுதல், தொழிலாளர் நலம் பேணுதல், பொதுநலம் விளைத்தல், ஜனநாயகப் பண்பை வளர்த்தல் போன்ற பிரச்சினைகளில் ஒன்றுபட்டுக் கூட்டணியாக இயங்க முடியும் என்றுதான் திராவிட முன்னேற்றக் கழகம் நாணயமாக நம்பிற்று; நேர்மையாகச் செயலாற்றி வந்தது.

கூட்டமாகச் சேர்ந்து செயலாற்றும் போதெல்லாம், கம்யூனிஸ்டுத் தோழர்களின் போக்கு, "நான் உங்கள் வீட்டிற்கு வந்தால் என்ன தருகிறாய்; நீ எங்கள் வீட்டுக்கு வந்தால் என்ன கொண்டு வருகிறாய்" என்ற தன்மையிலே அமைந்திருந்ததைக் கழகத் தோழர்கள் பல இடங்களிலும் கண்டார்கள். "மிஞ்சினால் கெஞ்சுவது; கெஞ்சினால், மிஞ்சுவது" என்ற கொள்கையையும் பல்வேறு இடங்களில் கையாண்டுவரக் கம்யூனிஸ்டுகள் தவறவில்லை.

கூட்டு முயற்சி வெல்லவேண்டும் என்பதிலே இருந்த நோக்கத்தைவிட, தம் கட்சியின் வளர்ச்சிக்குத் தடையாக, முற்போக்கு இளைஞர்களைக் கவரும் தன்மையதாகக் கழகம் வளர்கிறதே எனக் கண்டு, அடுத்துக் கெடுப்பதற்கான வழிவகைகளிலே செலுத்திய நோக்கந்தான் சிறப்புடையதாக மேம்பட்டு விளங்கி வந்தது. கூட்டணியால் ஏற்படும் உறவை அடிப்படையாகக் கொண்டு, 'கழகத்தலைமை', 'கழகத் தொண்டர்' என்று கழகத்தை இரு வகைக் கூறுபடுத்தி, இல்லாதது பொல்லாதுகளைப் புனைந்துரைத்துக் கூறுவதன்மூலம், கழகத் தோழர்களிடையே பிரிவையும் பேதத்தையும், இழிவையும் அழிவையும் உண்டாக்கி விடலாம் என்ற கருத்தில், தனிப்பட்ட முறைப் பிரச்சாரம் செய்து வந்திருக்கிறார்கள். இந்த வகைப் பிரச்சாரத்தால் கழகத்துக்கு இழிவோ அழிவோ வந்துவிடவில்லை என்றாலும், உறவுமுறை அன்புக்கும் ஆக்கத்துக்கும் அடிப்படையாக இல்லாமல், அருவருப்புக்கும் வேதனைக்கும் காரணமாக இருக்கிறதே என்று கழகத் தோழர்கள் மனம் புழுங்கத் தலைப்பட்டனர். கழகத்தின் வளர்ச்சியைத் தடுக்க, செல்வாக்கை அழிக்க, சக்தியை ஒடுக்க 'இரகசிய சுற்றறிக்கை' விட்டுக் கொள்வதும், தங்கள் காரியம் ஆகவேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காகக், கூட்டு முன்னணியை வேண்டுவதும், கழகத் தோழர்களுக்கு 'அருவருப்பான சூழ்நிலை'யை உண்டாக்கியதோடல்லாமல், கம்யூனிஸ்டுகள் "உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவோர்" என்பதாகவும் தெளிவுபடுத்தின. இவையெல்லாவற்றையும் ஒருசேர வைத்துப் பார்க்கும் போது, கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையிடம் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்துள்ள பாடத்தைப் படித்துக் காட்டுவது போன்ற நிலைமையே கழகத்தவர்க்குத் தெளிவாகியது.

கம்யூனிஸ்டுகள் அதிகாரமும், ஆதிக்கமும் பெறும் வாய்ப்பு ஏற்பட்டால், அவர்கள் நடந்துகொள்ள வேண்டிய விதத்தை, லெனின் அவர்களுக்குக் கொள்கையாக வகுத்துக் காட்டியுள்ளார்.

"மொத்தம் ஐந்து கட்சிகள் இருந்தால், அவைகளில் நான்கோடு நீ சேர்ந்து கொள்; ஐந்தாவது கட்சிக்காரனை எதிரியாக ஆக்கிக் கொள். அவன் அழிக்கப்பட்ட பிறகு, இந்த முறையையே மீண்டும் கையாண்டு, அவர்களில் மூன்று பேரோடு சேர்ந்து கொண்டு, நான்காவது பேர்வழியைத் தள்ளு. இந்த முறையை மறுபடியும், மறுபடியும் கையாள்; இறுதியாக நீ ஒரு கட்சியோடு தனித்து நிற்கும் வரை கையாள். ஒரே கட்சியை உருவாக்கிக் காட்ட உன்னால் இயலவில்லை என்றால், நீ எந்த வகையிலும் பயன்படுபவன் ஆக மாட்டாய்."

"If there are five parties, join with four of them and make an enemy of the fifth. When he is destroyed repeat this with three of the parties and expel the fourth. Repeat again and again until you are left alone with one, and if you are not able to cope with one party you are not much good anyway" என்பதுதான் அந்தக் கொள்கை.

இப்படிப்பட்ட அருவருப்பான சூழ்நிலையோடு கூடிய உறவு நீடிப்பதை விட, ஒதுங்கி நின்று நொதுமலாளர் நிலையில் பணி புரிவது நாட்டிற்கும் நன்மை ஏற்படும்; கழகத்தார்க்கும் மனச் சங்கடம் ஏற்படாது என்று கழகம் முடிவு செய்தது.

தொடர்பை நிறுத்திக்கொள்வது கம்யூனிஸ்டுக் கட்சியை எதிர்ப்பதும் ஆகாது; காங்கிரசுக்கு ஆதரவு தருவதும் ஆகாது. காங்கிரசுக்கு எதிர்ப்பு ஒரே முனைதான்; அதுவும் கம்யூனிஸ்டுக் கட்சிதான் என்பது அல்ல; அதே வலிவு ஆக்கத்தோடு வேறு முனைகளும் இருக்கக்கூடும்; இருக்கின்றன. காங்கிரஸ் சர்க்காரை வீழ்த்தக் கம்யூனிஸ்டுக் கட்சி விடும் எந்தக் கணைகளையும் முன்னேற்றக் கழகம் தடுக்காது-தாக்காது. கணைகள் படாத இடங்களிலே கணைகள் புக, வேறோர் முனையிலே நின்று வேலை செய்யும்.

ஆதரவு தரவேண்டிய அவசியமான நேரத்தில், தனது இலட்சியத்திற்கு மாறுகாத வகையில் ஆதரவும் தரத்தான் செய்யும். இராயலசீமா பஞ்ச நிவாரணத்திற்கான நிதியைக் கம்யூனிஸ்டுத் தோழர் நாகி ரெட்டி திரட்டினார் என்பதற்காகப் பொதுச்செயலாளர் அறிஞர் அண்ணா வாளாயிருந்து விடவில்லை; ரூ 100/- நன்கொடையளிக்கத்தான் செய்தார். தேர்தல் காலத்திலும், கழக ஒப்பந்தப் பத்திரத்

தில் கையெழுத்திடும் வாய்ப்பு ஏற்படாத இடங்களில், கழகத் தோழர்களின் ஓட்டு காங்கிரஸ்காரர்களுக்கு எவ்விதத்திலும் போகக் கூடாது, எதிர்த்து நிற்பவர்களில் கம்யூனிஸ்டுகளுக்கு முதன்மையிடம் அளியுங்கள் என்ற குறிப்பை உணர்த்திதான் பொதுச்செயலாளர் அறிக்கை வெளியிட்டார். பாலன் கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்தவர் என்ற காரணத்திற்காக, தூக்குத் தண்டனை ரத்தைத் தீர்மானம் மூலம் கோராமலில்லை. கம்யூனிஸ்டுகள் ஆதிக்கம் நிறைந்த தொழிற்சங்கம் என்ற காரணத்தால், இரயில்வே லேபர் யூனியன் மாநாட்டிலும் அறிஞர் அண்ணா கலந்து கொள்ளாமலில்லை. இதுபோன்ற செயல்களுக்கான அவசியம் ஏற்படும் போதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் தன் கடமையைச் செய்யத் தவறியதில்லை; இனியும் தவறாது.

உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசி, நேரில் ஒன்று செய்து மறைவில் ஒன்று நடத்தி வரும், உள்ளன்பு அற்ற உறவுமுறை, ஊக்கத்தையும் உணர்ச்சியையும் கெடுத்து, அருவருப்புக்கொண்ட அரசியல் சூழ்நிலையை வளர்ப்பதால், அந்தமுறை வேண்டாம்; நிறுத்திக் கொள்வோம் என்று பொதுக்குழு முடிவு எடுத்தது. கம்யூனிஸ்டு கட்சியின் போக்கு விரும்பத் தக்க முறையில் மாறுகிற வரையில் என்ற சொற்றொடர் கழகத்தின் நல்லெண்ணத்தையும், நல்ல எதிர்காலத்தை எதிர்பார்க்கும் நோக்கத்தையும் காட்டுவதாகும். எதிர்பார்க்கும் நல்ல சூழ்நிலை ஏற்பட்டால் நொதுமலாளன் நிலையிலிருந்து நண்பன் நிலைக்குக் கழகம் தானே நகரும்.

பொதுக்குழுவின் இந்த முடிவு சங்கடமான நிலையைத் தவிர்த்துக் கொண்டதாக ஆகுமே யொழிய, காங்கிரஸ் யதேச்சாதிகார ஏகாதிபதிய முதலாளித்துவ ஆட்சியை முறியடிப்பதைத் தளர்த்திக் கொண்டதாக ஆகாது!

காங்கிரசை எதிர்க்கும் முனை, கம்யூனிஸ்டுகளோடு உறவு கொள்ளும்போது மட்டும் அமையும் ஒன்றல்ல; கம்யூனிஸ்டுகளோடு உறவு கொள்ளாத நிலையிலும் அமையக் கூடிய ஒன்றுதான். காங்கிரஸ் எதிர்ப்பும், கம்யூனிஸ்டு உறவும் ஒன்றையொன்று எதிர்பார்த்தே நிகழ வேண்டுமென்பதல்ல. கம்யூனிஸ்டு உறவு இல்லாமலே கூட காங்கிரசை எதிர்க்க முடியும்; காங்கிரஸ் எதிர்ப்பை அடிப்படையாகக் கொள்ளாமலே கூட கம்யூனிஸ்டு உறவைக் கொள்ள முடியும். எனவே அரக்கோணத்தில் எடுக்கப்பட்ட முடிவு கம்யூனிஸ்ட்டுக் கட்சிக்குத் தொல்லைதர அல்ல; அதனால் ஏற்பட்ட தொல்லைகளைத் தவிர்க்கவே! **எதிர்ப்பல்ல; தொல்லை தவிர்ப்பே!**

## வளர்க 'நம் நாடு'

'நம் நாடு' திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாள் இதழாக இன்றிலிருந்து மலர்கிறது. அதன் மணம் தமிழகமெங்கணும், அதற்கப்பாலும் கமழ்ந்து, திராவிட மக்களுக்குக் குறிப்பாகக் கழகத் தோழர்களுக்குப் புதியதொரு பொலிவையும், பெருமிதத்தையும தரும் என்பதில் ஐயமில்லை.

தேனீக்கள் சேர்த்து வைக்கும் தேனைப் போல், கழகத் தோழர்கள் சிறிது சிறிதாகச் சேர்த்த பொருளிலே "நம் நாடு" ஊற்றெடுக்கிறது. அதன் ஆக்கமும், தேக்கமும் கழகத் தோழர்களின் முயற்சியையும், முயற்சியின்மையையும் பொறுத்திருக்கிறது. அதன் இலாபம்-நஷ்டம் கழகத்தைச் சேர்ந்தது. எனவே விற்பனையாளரைத் தேர்ந்தெடுத்துத் தருதல், சந்தா சேர்த்துக் கொடுத்தல், பரவாத இடங்களிலே இதழைப் பரப்புதல் போன்ற பணிகளில் கழகத் தோழர்கள் ஈடுபட்டால்தான் கடமையைச் செய்தவராவார்கள். அதன் வாழ்வு கழகத்தாரின் வாழ்வு; அதன் வீழ்ச்சி கழகத்தாரின் வீழ்ச்சி! எனவே இதனை நினைவில் கொள்வோமாக! வளர்க வாழ்க 'நம் நாடு'!

---

அடுத்த இதழிலிருந்து, தையற் கலையில் விற்பன்னரும், தையற் தொழிற் படிப்பில் அரசாங்கச் சான்று பெற்றவரும் ஆன தோழர் கே. பி. சுந்தரம் G. C. T., T. T. C அவர்கள் தையல் தொழிலின் வரலாறு, பண்பு நுணுக்கம், பயிற்சி பற்றிய கட்டுரைகளைத் தொடர்ந்து எழுதிவருவார். தையல் தொழிலைக் கற்றுக்கொள்ள விரும்புவோர் மிக்கப் பயனைப் பெறலாம்.

ஆசிரியர்.

# ஆரம்பக் கல்வித் திட்டம்

## முசோலினி-ஹிட்லர் வழியில் ஆச்சாரியார்

பதினைந்து ஆண்டுகளுக்கு முன் சிறுவர்களின் கல்வி முறையில் மாறுதல் கொண்டுவர முதன் மந்திரி ஆச்சாரியார் முயன்றார். இன்றும் அதே போன்றதொரு முயற்சியில் அவர் ஈடுபட்டிருக்கிறார். அன்று கட்டாய இந்தியைக் கொண்டு வந்தார். இன்று ஆரம்பக் கல்வித் திட்டத்தைக் கொண்டு வருகிறார். தமிழறிஞர்கள், கல்வியறிஞர்கள், பேராசிரியர்கள், பொதுமக்கள் பலருடைய எதிர்ப்பும் கட்டாய இந்திக்கு இருந்தது; அத்தகைய எதிர்ப்பு ஆரம்பக் கல்வித் திட்டத்துக்கும் உருவாகிக் கொண்டிருக்கிறது.

ஜனநாயகப் பண்புடைய நாடுகளில் கல்வி முறையில் திடீர் மாறுதல்களை அரசாங்கம் நேரடியாகச் செய்வதில்லை. ஆசிரியர்கள், கல்வி நிபுணர்கள், பல்கலைக்கழகத் தலைவர்கள் இவர்களது ஆலோசனையின் பிறகுதான் அரசாங்கம் கல்வித் துறையில் மாறுதல்களைச் செய்ய முன் வரும். ஆனால் சர்வாதிகார ஆட்சி இருந்த நாடுகளில் ஒவ்வொரு வகையான கல்வித் திட்டம் புகுத்தப் பட்டது. முசோலினி ஆட்சியைக் கைப்பற்றியதும், முதலில் செய்த முக்கியமான வேலைகளில் ஒன்று கல்வித் திட்டத்தை மாற்றி, தனது கட்சிக்கு ஆதரவாகவும், தன் கொள்கைகளை விளக்கவும் உதவியாக அமைத்துக் கொண்டான். அதற்குத்தான் பாசிசக் கல்வி முறை என்று பெயர் கொடுக்கப்பட்டது. அதே போல் ஹிட்லரும் நாசிக் கட்சியின் தலைவனாக ஆட்சி முறையைக் கைப்பற்றிய பொழுது, ஜெர்மனியில் நாசிக் கல்வி முறை என்று தன் கட்சியின் தத்துவங்களை வற்புறுத்தும் வகையில் கல்வித் திட்டத்தையும், பாடப் புத்தகங்களையும் மாற்றி யமைத்தார். அதே போல் ஆச்சாரியாரும் தமிழ் நாட்டில் புதிய பாசிச கல்வித் திட்டத்தை-புதிய வர்ணாசிரமத் திட்டத்தைக் கொண்டு வரப் பாடுபடுகிறார், எதேச்சாதிகார முறையில் சர்வாதிகார ஆணவத்துடன்.

## வர்ணாசிரமத்துக்கு அடிமை

ஆச்சாரியாரின் ஆரம்பக் கல்வித் திட்டப்படி, ஒவ்வொரு மாணவனும் தினந்தோறும் பள்ளி நேரத்தில் பாதி நேரத்தைத் தன் குலத் தொழிலுக்காகச் செலவு செய்ய வேண்டும். குலத்தொழிலை அடிப்படையாகக் கொண்டது வர்ணாசிரம தர்மமாகும். வர்ணாசிரம தர்மந்தான் பிறப்பிலும் தொழிலிலும் பேதங்களைக் கற்பித்து, நால்வகைச் சாதிகளையும் அதற்கு மேல் நாலாயிரம் பிரிவுகளையும் உண்டாக்கியது. அதன் விதிப்படி புல்லறுப்போன் தாழ்ந்த குலம், புல்லை ஏந்துவோன் புனித குலம்; நெல்லை விற்போன் ஒரு குலம், வில்லைப் பிடிப்போன் வேறோர் குலம். ஆரம்பக் கல்வித் திட்டப்படி இந்த வர்ணாசிரம தர்மத்தால் தொழில் வேற்றுமைகள் பாதுகாக்கப்படுகின்றன.

கட்டாய இந்தியால் தமிழ் நாட்டை வடநாட்டுக்கு அடிமையாக்க முயற்சி செய்யப்பட்டது. ஆரம்பக் கல்வித் திட்டத்தால் தமிழ் நாட்டை வர்ணாசிரமத்திற்கு அடிமையாக்கத் திட்டமிடப் படுகிறது. இரண்டு திட்டங்களுக்கும் காரணமாயிருப்பவர் அன்பர் ஆச்சாரியார்தான்.

## மனிதத் தன்மைக்கு மாறுபட்டது

வர்ணாசிரம விதிப்படி எல்லோரும் படிக்க முடியாது, படிக்கக் கூடாது. பரம்பரையாக வரும் தொழில் முறை: செய்து கொண்டே போக வேண்டும். ஆங்கிலக் கல்வி பரவிய பின் தான் எல்லோரும் படிக்கலாம் என்ற நிலைமை ஏற்பட்டது. பிற்பட்ட வகுப்பினரும் தாழ்த்தப்பட்ட சாதியினரும் ஆங்கிலக் கல்வி முறையில் கூடச் சரியாகப் பலன் பெற முடியவில்லையென்றாலும், மற்ற உயர்ந்த சாதியினரைப் போல படிப்பதற்கான உரிமையாவது இருந்தது. புதிய ஆரம்பக் கல்வித் திட்டப்படி இந்த உரிமையும் பறிக்கப்பட்டுவிடுகிறது.

இந்த நாட்டில் பிறந்த குடிமகனான ஒவ்வொருவனுக்கும், எல்லாத் துறைகளிலும் முன்னேறுவதற்கு ஒத்த உரிமையும் வசதியும் தரப்படுகின்றன என்று இந்திய அரசியல் சட்டம் அடிப்படை உரிமைகளைப் பற்றிக் கூறுகிறது.

ஆனால் இந்த அரசியல் சட்டம், ஆச்சாரியாரின் ஆரம்பக் கல்வித் திட்டத்தால் புறக்கணிக்கப்படுகிறது. பிறப்பாலும் தொழிலாலும் பேதங் காட்டக்கூடாது என்று அரசியல் சட்டம் கூறினால், ஆச்சாரியாரின் திட்டம் பேதங் காட்டு என்று சொல்லுகிறது. ஒரு குலத்தில் பிறந்தவன் என்பதற்காக அந்தக் குலத்துக்குரிய தொழிலை மட்டும் அவன் செய்ய வேண்டுமேயன்றி, வேறு உயர்ந்த அல்லது பிடித்தமான தொழிலை அவன் செய்ய முடியாது. மேலும் முழுநேரக் கல்வியின் பலனும் அவனுக்குக் கிடைக்காது. அவனுடைய கல்வி வளர்ச்சியில் குலமும் தொழிலும் குறுக்கே வந்து நிற்கின்றன. ஆச்சாரியாரின் ஆரம்பக் கல்வித் திட்டம் அரசியல் சட்டத்துக்கு ஒவ்வாதது, மனிதத் தன்மைக்கு மாறுபட்டது.

## அவசியம் என்ன?

ஆச்சாரியாரின் திட்டத்துக்கு தேவை என்னவென்று நமக்கு விளங்கவில்லை. நாட்டில் வேலைகள் அதிகமாக இருந்து, வேலை செய்வதற்கு ஆட்கள் கிடைக்கவில்லை என்ற நிலை ஏற்பட்டால், சின்னஞ் சிறியவர்களை யாவது வேலைகளில் ஈடுபடுத்தி ஆட்கள் குறைவை சமாளிக்கலாம். ஆனால் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கிறது. வேலைதெரிந்த, வயது வந்தவர்களே வேலை கிடைக்காமல் ஏங்கிக் கிடக்கும் பொழுது, பள்ளியில் படிக்கவேண்டிய சிறுவனையும் பள்ளிக்கூடத்தை விட்டு விரட்டி, வேலை செய்யச் சொல்வதில் அர்த்தமில்லை. தறி போட்டுக் கொண்டிருந்த தணிகாசலம் வேலையின்றி சுற்றிக்கொண்டிருக்கும் பொழுது அவனுடைய மகன் தாண்டவராயனையும் "நீ படித்தது போதும், வீட்டுக்குப் போய் வேலையைப் பார்!" என்று சொல்வதிலே என்ன பலன்? வீட்டுக்குப் போனால் அவிந்த அடுப்பு, அசையாது கிடக்கும் தறி, கண்ணீர் விடும் தாய், கதறிடும் தம்பி, தங்கைகள், இவைகளைக் கண்டு கலங்கி நிற்கும் தந்தை இவர்களைத்தானே அவன் பார்க்க முடியும்!

## உற்பத்தி உயரும் வழி ஆகாதே!

தொழில் பெருகி, நாட்டின் உற்பத்தி உயர்ந்தால்தான் நாட்டின் பொருளாதார நிலையும், மக்களின் வாழ்க்கை வசதிகளும் உயரும் என்பது உண்மையே. அதற்காக வேலை தெரிந்தவர்கள் தேவை என்பதையும் ஒப்புக்கொள்ளுகிறோம். தொழில் என்று கூறும் பொழுதும், வேலை தெரிந்தவர்கள் என்று குறிப்பிடும் பொழுதும், கூடை கட்டுதல், பானைசெய்தல், கோரைப் பாய்ப் பின்னுதல் என்ற அளவுடனே ஆச்சாரியார் நின்று விடுகிறார். இப்போதுள்ள கிராம நிலையின்படி, கிராமத்துச்சிறுவர்கள் இந்தத் தொழில்களைத்தான் அங்கே கற்றுக்கொள்ள முடியும். கோரைப் பாயையும், மண் சட்டியையும் சிறுவர்கள் செய்யப் பழகி விடுவதாலேயே நாட்டின் செல்வநிலை உயர்ந்துவிடாது. தொழில் தெரிந்தவர்கள் என்றால் விஞ்ஞானக் கல்வி கற்றவர்கள், தொழில் நுட்பம் தெரிந்தவர்கள், இயந்திர அமைப்புகளை அறிந்தவர்கள், பெரும் தொழிற்சாலைகளை ஆக்கவும் காக்கவும் ஆற்றல் படைத்தவர்கள், ஆற்றுக்கு அணை போடும் என்ஜினியர்கள், நீர்வீழ்ச்சியிலே நெருப்பை எடுக்கும் நிபுணர்கள் இவர்கள் நாட்டுக்குத் தேவை.

## கல்வியறிவா? குடிசைத் தொழிலா?

கல்வி கற்றவர்களைக் கிராமத் தொழில்களுக்குத் திருப்ப வேண்டிய அளவுக்கு தொழில்கள் அதிகம் இல்லை என்று கண்டோம். இரண்டாவதாக, கல்விகற்றுத் தேர்ந்தவர்கள் அதிகமாகி விட்டனர்; ஏட்டுப் படிப்பினர் அதிகம் இருப்பதை விட நாட்டுத் தொழில்கள் தெரிந்தவர்கள் சிலராவது இருக்கட்டும்" என்ற நிலை ஏற்பட்டிருக்கிறதா என்றால் அதுவும் கிடையாது.

இந்தியாவில் எழுத்தறிவு அற்றவர்கள் தொகை அதிகமானது. மக்கள் தொகை கணக்குப்படி 100க்கு 14 பேர்தான் படிக்கத் தெரிந்தவர்கள். மீதி இருக்கும் 100க்கு 86 பேர்களுக்குக் கல்வியறிவு தரப்படவில்லை. ஆச்சாரியார் சர்க்கார் உண்மையிலேயே திறமையான சர்க்கார் என்றால், இந்த இழி நிலையை நீக்க, கட்டாயக் கல்வி போன்ற சிறந்த நாட்டுக்குப் பயன்தரும் திட்டங்களை உண்டாக்கி நிறைவேற்ற வேண்டும். இதற்கு எல்லோருடைய ஆதரவும் ஒத்துழைப்பும் இருக்கும். ஒரு நாட்டை வளமுள்ளதாகவும், பலமுள்ளதாகவும் செய்வது அந்த நாட்டுக் கல்வி வளர்ச்சியின் அளவேயாகும். கல்வியறிவற்றவர்கள் அதிகமாகக் காணப்படுகின்றனர் என்றாலும்

ஒரு வகைத் திட்டமிட்டு அரசாங்கம் பாடு பட்டால் அந்தக் குறையை நீக்கிவிட முடியும். உதாரணமாக சார் காலத்து ருஷியாவில் கல்வியறிவு மிகக் குறைவாயிருந்தது. 1917ல், புரட்சிக்கு முன்பு, 100க்கு 22 பேருக்குத்தான் எழுத்தறிவு இருந்தது. புரட்சி ஏற்பட்டு புதிய முறை தொடங்கியதும், கல்வித் திட்டங்கள் வகுக்கப்பட்டு 1926ல் கல்வி கற்றோரின் தொகை 100க்கு 56 ஆக உயர்த்தப் பட்டது. ஒன்பது ஆண்டுகளுக்குள்ளாகவே இவ்வளவு ஆச்சரியப்படத்தக்க வளர்ச்சியை ருஷியாவில் காணமுடிந்தது. ஆனால் இந்தியாவிலோ 1941-ல் 100 க்கு 12 பேராக இருந்தது, 1951ல் நூற்றுக்கு 14 பேராக ஆகி யிருக்கிறது. இடையிலே சுதந்தர சூரியன் உதயமாகியுங் கூட, அறிவொளி நாட்டில் அதிகமாகப் படிய வில்லை. சிறிது மங்கிக் காணப்படும் ஒளியைக் கூட ஆச்சாரியார் கறுப்புத் திரையிட்டு மூட முயலுகிறார், தமது திட்டத்தால்.

## நீங்காத இருள்

ஆச்சாரியாரின் திட்டத்தால், ஏறத்தாழ, 22 ஆயிரம் பள்ளிக்கூடங்களும் 21 லட்சம் மாணவர்களும் பாதிக்கப்படுகின்றனர். கிராமாந்திரங்களில் இருக்கும் சிறுவர்களனைவரும் பள்ளிக்கூடம் போவதில்லை. சென்ஸஸ் கணக்கு ஆராய்ச்சிகளின்படி கிராமங்களில் 100-க்கு 25-பையன்கள்தாம் ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்குப் போகிறார்கள். பள்ளிக்கூடங்களுக்கு வருகிற பையன்களும் ஒழுங்காகத் தொடர்ந்து படிக்கிறார்கள் என்று கூறமுடியாது. சர்க்கார் அறிக்கைப்படி, இந்த 25 பையன்களில், 20 பையன்கள் ஒரு ஆண்டுப் படிப்புக்குப் பின் பள்ளிக்கூடத்துக்கு வராமல் நின்றுவிடுகிறார்கள். அவர்கள் வராததற்கான காரணம் காட்டும் பொழுது "ஏழ்மையின் காரணமாகவும், தங்களுடைய பெற்றோர்களுக்குத் துணையாக வயலிலும், வீட்டிலும் வேலை செய்யப் போய்விடுகிறார்கள்" என்று சொல்லப்படுகிறது. எனவே கிராமந்திரச் சிறுவர்களில் நூற்றுக்கு ஐந்து பேர் மட்டுமே ஆரம்பப் பள்ளிக் கூடத்திலிருந்து, நடுநிலைப் பள்ளிக்கு வரமுடிகிறது. இந்தக் குறைந்த மாணவர்களின் கல்வியறிவும் ஆச்சாரியாரின் திட்டத்தால் பாழ்செய்யப் படுகிறது.

ஆச்சாரியாரின் "அபூர்வமான" திட்டத்தின் உதவியில்லாமலே 100-க்கு 75 சிறுவர்கள் வயலிலும், தோட்டங்களிலும் வேலை செய்யப் போய்விடுகிறார்கள். மிகுந்திருப்பவர்களில் 20 பேர் ஒரு ஆண்டுப் படிப்புக்குப்பின், படிக்க ஆர்வமிருந்தும் ஏழ்மையின் காரணமாகப் பள்ளிக்கூடத்திலிருந்து நிறுத்தப்பட்டு, கண்ணீர் மல்கும் கண்களுடன் கலப்பையைத் தோளில் சுமந்துகொண்டு, நீங்காத இருளை மனதிலே தாங்கிக்கொண்டு போகிறார்கள்.

## நாட்டின் நிலை

"விலங்கொடு மக்களனையர் இலங்குநூல் கற்றாரோடு ஏனையவர்" என்ற குறள்படி, கல்வி கற்ற பின்தான் மனிதத்தன்மை பெறுகிறான். கல்வி கற்காதவன் விலங்குக்குச் சமமாவான். அதேபோல் கல்வியறிவு ஏதுமின்றி, எண்ணற்றச் சிறுவர்கள் ஆடுமாடு மேய்த்தும், சேறு சகதிகளில் உழன்றும், ஏர் பிடித்தும் ஏற்றம் இறைத்தும் வாழ்கின்றனர், வாழ்க்கை இன்னதென்றே தெரியாமல். கோழிகூவுவதே அவர்களுடைய பள்ளிக்கூடத்து மணியொலி. ஆடுமாடுகளே பள்ளிக்கூடத் தோழர்கள். சேறு நிறைந்த வயலே அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கரும்பலகை. அதில் அவர்களுடைய ஏர் சென்ற வழியே எழுத்துக்களின் வடிவம். அதற்குமேல் அவர்களுக்கு ஒன்றும் தெரியாது. அவர்களுடைய மனதில் நீங்காத இருள், விலகாதபனி மூடிக்கிடக்கின்றன. ஆச்சாரியாரி திட்டம் அந்த இருளை இன்னும் அதிகரிக்கச் செய்கிறது.

வயலிலும் வாய்க்காலிலும், சேற்றிலும் சகதியிலும், குப்பைக் கூளங்களிலும் சிதறிக் கிடக்கும் அந்தச் சிறுவர்கள்தாம் நமது நாட்டின் செல்வங்கள். அந்த மணிகளைப் பொறுக்கி ஒளிதரச் செய்வது அரசியலின் கடமை.

## அபூர்வத் திட்டம்!

ஆச்சாரியாரின் திட்டம் சர்வாதிகாரப் போக்குடையது. ஜனநாயகக் கோள்கைக்கு மாறுபட்டது, அரசியல் சட்டப்படி கிடைத்துள்ள அடிப்படை உரிமைகளைத் தாக்குவது, வர்ணாச்சிரமத்தை நிலை நாட்டுவது, தேவையற்றது, பயனற்றது. அறியாமையை வளர்ப்பது, தவிர அபத்தமான திட்டம், எதிர்காலத்தில் ஆபத்தைத் தரும் திட்டமுமாகும்.

# தாய்மையும் குழந்தைநலப் பாதுகாப்பும்

'டாக்டர்'

## 5

## தாய் தவிர்க்க வேண்டியவைகள்

1. குழந்தையின் அழுகையை நிறுத்தவோ, அல்லது அது தன் பசியை மறக்கவோ "ரப்பர் சூப்பான்" கொடுக்கக் கூடாது.

2 குழந்தையிடம், அசுத்தமான பொம்மையை விளையாடக் கொடுக்கக் கூடாது.

3. குழந்தை தன் கைவிரலைச் சூப்பவிடக் கூடாது.

4. குழந்தையின் மேலும், அதன் பொருள்களின் மேலும் ஈக்கள் உட்காரும்படி விடக்கூடாது.

5. குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுப்பதற்கு முன் தாய்மார்கள் கைகளைச் சுத்தம் செய்துகொள்ளத் தவறக் கூடாது.

6. குழந்தையின் முகத்தில் எச்சில் படும்படி முத்தம் கொடுக்கக் கூடாது.

7. ஈரமான துணிகளையோ, மிகவும் அழுக்கு நிறைந்த துணிகளையோ, கால்கைகளை அசைத்து - ஆட்டி - உதைத்து விளையாடத் தடையாக இருக்கும் ஆடைகளையோ குழந்தைக்கு அணிவிக்கக் கூடாது.

8. குழந்தையின் தொப்புளில் சாணி, சாம்பல போன்ற அசுத்தமான பொருள்களைத் தடவித் தொப்புளைச் சீழ்ப்பிடிக்க விட்டுவிடக்கூடாது.

9. தொட்டிலில் இட்ட பின்னர், தொட்டிலை ஆட்டியே தூங்கவைக்கும் ஒரு பழக்கத்தை உண்டு பண்ணக்கூடாது.

10. குழந்தை அழும்போதெல்லாம் பால் கேட்கிறது என்று நினைத்துக்கொண்டு பால் கொடுக்கக் கூடாது.

11. குழந்தை இரவில் விழித்துக்கொண்டு அழுதாலும் கூட உணவு கொடுக்கக்கூடாது.

12. வாயில் பால்புட்டியைக் கொடுத்துப், பால் புட்டியோடு குழந்தையைத் தூங்கவிடக் கூடாது.

13. உணவு உட்கொள்ளும் போது குழந்தையைத் தனியாக விட்டுவிடக் கூடாது.

14. குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்கும் போதுத் தாய்மார்கள் தூங்கிவிடக் கூடாது.

15. குழந்தையின் பால்புட்டி, பால்பாத்திரம் முதலியவற்றை, உடனுக்குடனே சுத்தமான வெந்நீரில் கழுவ மறந்துவிடக் கூடாது.

16. ஒரு வயதுக்கு மேல் குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்கக் கூடாது.

17. குழந்தைக்கு ஒருநாள் விட்டு ஒருநாள் விளக்கெண்ணெய் கொடுக்கும் பழக்கத்தைக் கையாளக் கூடாது.

18. ஆரஞ்சுப் பழ ரசமும், மீன் எண்ணெய்யும் தினமும் ஒரு முறை கொடுக்கத் தவறக்கூடாது.

19 "தப்பாய்க் கரிசி"க் கஞ்சி, காப்பி, அல்வா, இட்டலி போன்ற உணவு வகைகளை நான்கு மாத வயதுக்குட்பட்ட இளங் குழந்தைகளுக்குக் கொடுக்கக் கூடாது.

20. க்ஷயரோகம், விஷக் காய்ச்சல், தொற்று நோய்கள் போன்ற நோய்களால் பீடிக்கப்பட்ட தாய்மார்கள், தங்கள் குழந்தைகளுக்குத் தாய்ப்பால் கொடுக்கக் கூடாது.

21. கக்குவான் இருமல், பேதி, சீதபேதி, காய்ச்சல், வைசூரி போன்ற நோய்கள் உள்ளவர்களிடம் குழந்தையை நெருங்க விடக்கூடாது.


எமது புதிய வெளியீடுகள்!

**படித்து மகிழ்வீர் அறிவுவிருந்துகளை!!**

**கலைஞர் மு. கருணாநிதி**

1. பரப்பிரம்மம் ரூ. 1—0—0
2. நாடும் நாடகமும் ரூ. 1—0—0

**அரங்கண்ணல்**

3. உடைந்த ஆசை ரூ. 1—0—0

**தில்லைவில்லாளன்**

4. கிளிக்கூண்டு ரூ. 1—0—0

**திராவிடப் பண்ணை**

தெப்பக்குளம் :: திருச்சி.

# பிரிட்டிஷ் காமன்வெல்த்

**பிரிட்டிஷ் காமன்வெல்த்** என்றால், பிரிட்டிஷ் ஆதிக்கத்தின்கீழ் இருக்கும் ஒரு சில நாடுகள் தாம் என்று பலரும் நினைப்பார்கள். பிரிட்டிஷ் காமன்வெல்த்தைச் சேர்ந்தவை என்று பெரும்பாலோர் காதுகளில் அவ்வப்பொழுது விழும் நாடுகள், இங்கிலாந்து, கானடா, தென் ஆப்ரிக்கா, ஆஸ்திரேலியா, இலங்கை, பாகிஸ்தான், இந்தியா முதலியவைகளேயாகும். இந்த ஆறு, ஏழு நாடுகளுடன் பிரிட்டிஷ் காமன்வெல்த் முடிந்துவிடவில்லை. இந்தக் காமன்வெல்த் முறையில் 56 நாடுகள் சிக்கியிருக்கின்றன. அவை உலகின் நான்கு பக்கங்களிலும் சிறிதும் பெரிதுமாகச் சிதறிக் கிடக்கின்றன.

15வது நூற்றாண்டின் மத்தியில் கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்ததும், ஐரோப்பிய நாட்டினர் கடல் மார்க்கமாய் வேறு நாடுகளுக்குப் போகத் தலைப்பட்டனர். வசதியான இடங்களில் சற்று வலுப்பெற்றதும் அந்த இடங்களை ஆக்ரமித்து, அடிமை கொண்டு, தங்களுடையதாக்கிக்கொண்டனர். அவ்வாறு ஏற்பட்ட பகுதிகள் குடியேற்ற (காலனி) நாடுகள் என முதலில் அழைக்கப்பட்டன.

அமெரிக்காவுக்கும், இந்தியாவுக்கும கடல் மார்க்கங்கள் கண்டுபிடிக்கப் பட்டதும், ஐரோப்பிய நாட்டு வியாபாரக் கம்பெனிகள் ஒவ்வொன்றாகக் கிளம்பின. முதலில் சமாதான முறையில் நடைபெற்றாலும், பின் அந்தக் கம்பெனிகளிடைச் சண்டை சச்சரவு நிகழ ஆரம்பித்தன. கம்பெனிகள் ஒவ்வொன்றும் தத்தம் நாட்டு அரசாங்கத்தைத் துணைக்கழைத்தன. இதனால் நாளடைவில் வியாபாரக் கப்பல்களுடன் போர்க்கப்பல்களும் வர ஆரம்பித்தன. பண்டகசாலைகளைக் கோட்டைகளாக மாற்றித் தராசுபிடிக்க வேண்டியவர்கள் துப்பாக்கியுடன் காட்சியளித்து, சோப்பு, சீப்பு, கண்ணாடி இவைகளுடன் வெடி மருந்து பீரங்கி இவைகளை இறக்குமதி செய்து, வியாபாரம் செய்ய வந்த இடத்திலே விரோதங்களை வளர்த்து, அமெரிக்கா, ஆப்ரிக்கா, தென்கிழக்குஆசியா ஆகிய பகுதிகளில் கிடைத்த நாடுகளையெல்லாம் ஐரோப்பிய நாடுகள் அடிமைப்படுத்தின. இதுவே ஏகாதிபத்தியங்கள் வளர்ந்த வரலாறாகும்.

கடலாதிக்கம் பெற்றிருந்த காரணத்தால், முதலிலிருந்தே இங்கிலாந்து மேற்கிலும் கிழக்கிலும் தன் ஆதிபத்தியத்தைப் பரவச் செய்தது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் உலகில் மிகப் பெரிய பகுதியாக வளர்ந்தது. ‘கதிரவன் மறையாத சாம்ராஜ்யம்’ என்று கூறுமளவுக்கு ஐந்து கண்டங்களிலும், ஏழு கடல்களிலும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் பரந்து கிடந்தது. சாம்ராஜ்யம் பரவியதென்றால் வெறும் கடற்படை உதவியாலும், போர்க்களத்தில் பெற்ற வெற்றிகளால் மட்டும் உண்டாகவில்லை. சூழ்ச்சித்துணையாலே, வஞ்சக வழியிலே, துரோகச் செயலால், துன்பங்களின் மத்தியில் சாம்ராஜ்யம் வளர்க்கப்பட்டது. அதன் வரலாற்றில் பலப்பல கிளைவுகள், ஹேஸ்டிங்குகள், ஓமிச்சந்துகள், மீர்ஜாபர்கள் பயன்படுத்தப் பட்டனர்.

பத்தொன்பதாவது நூற்றாண்டின் மத்தியில் ‘பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம்’ என்று அழைக்கப் பட்டது. இந்த அமைப்பு முறை ஒரு சில மாறுதல்களுடன், ‘காமன்வெல்த்’ என இன்று அழைக்கப்படுகிறது.

ஆரம்பத்தில் முழு ஆதிக்கத்தையும் செலுத்திக் கொண்டிருந்த பிரிட்டிஷ் சிம்மம், தன்னையே பயமுறுத்தும் உரிமைக்குரல் வந்தால் தன் குரலைத் தணித்துக் கொண்டும், தன்னால் சமாளிக்க முடியாது என்று கண்டுகொண்டால் சிலபல உரிமைகளை வழங்கியும் வந்துள்ளது. இதனால் பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் அகப்பட்டுள்ள நாடுகள் வேறு வேறு அரசியல் தகுதிகள் உடையனவாய் விளங்குகின்றன. அவற்றில் முக்கியமான பிரிவுகள் அரசனால் ஆளப்படுவது, டொமினியன் நாடு, குடியேற்ற நாடு, பாதுகாப்பு நாடு, ஒப்பந்த நாடு, டிரஸ்ட் நாடு குடியரசு நாடு இவைகளாகும்.

பிரிட்டிஷ் காமன்வெல்த்தின் அளவையும், ஆதிக்கத்தையும் கீழ்க்கண்டுள்ள அட்டவணையில் நன்கு காணலாம்.

# பிரிட்டிஷ் காமன்வெல்த் நாடுகளின் அட்டவணை:—

| நாடுகளின் பெயர் | பரப்பு (ச. மைல்) | மக்கள் தொகை (ஆயிரத்தில்) |
|---|---|---|
| **ஐரோப்பாவில்:—** | | |
| (1) கிரேட் பிரிட்டன் | 88,754 | 4,88,41 |
| (2) வட அயர்லாந்து | 5,451 | 13,71 |
| (3) கால்வாய்த் தீவுகள் (ஜெர்சி, கொயர்னி) | 75 | 1,02 |
| (4) மான் தீவு | 221 | 55 |
| (5) ஜிப்ரால்டர் | 2 | 25 |
| (6) மால்டா | 121 | 3,07 |
| **ஆசியாவில்:—** | | |
| (7) ஏடன் | 1,12,000 | 9,00 |
| (8) பிரிட்டிஷ் போர்னியோ | 29,387 | 3,45 |
| (9) புருனெய் | 2,226 | 41 |
| (10) சாரவாக் | 50,000 | 5,46 |
| (11) இலங்கை | 25,332 | 75,00 |
| (12) சைபிரஸ் | 3,572 | 4,80 |
| (13) ஹாங்காங் | 391 | 20,30 |
| (14) இந்தியா | 12,20,099 | 34,73,40 |
| (15) மலேயா கூட்டாட்சி உள்பட | 50,850 | 53,37 |
| (16) சிங்கப்பூர் | 220 | 10,19 |
| (17) பாக்கிஸ்தான் | 3,37,524 | 7,56,87 |
| **ஆப்ரிக்காவில்:—** | | |
| (18) ஆங்கிலோ - எகிப்திய சூடான் | 9,67,500 | 75,47 |
| (19) பிரிட்டிஷ்தென் ஆப்ரிக்கா | | |
| (i) பாஸுடோலாண்டு | 11,716 | 5,56 |
| (ii) பெக்யூனலாண்டு | 2,75,000 | 2,94 |
| (iii) சுவாஜிலாண்டு | 6,704 | 1,84 |
| (20) காம்பியா | 4,033 | 2,76 |
| (21) கோல்ட் கோஸ்ட் | 91,690 | 45,01 |
| (22) கென்யா | 2,24,690 | 53,73 |
| (23) மௌரிடியஸ் | 807 | 4,57 |

| தலைநகர் | ஆட்சித்தொகுதி | ஆள்பவர் | |
|---|---|---|---|
| | | | (1) |
| லண்டன் | அரசன் ஆட்சி | அரசன் | (2) |
| செயின்ட் ஹெலியர் | அரசன் ஆட்சி | கவர்னர் | (3) |
| செயின்ட் பீட்டர்போர்ட் | | | (4) |
| டக்ளஸ் | அரசன் ஆட்சி | ,, | (5) |
| ஜிப்ரால்டர் | குடியேற்றநாடு | ,, | |
| வலேடா | தன்னாட்சிகொண்ட குடியேற்றநாடு | ,, | (6) |
| ஏடன் | குடியேற்றநாட்டுத்தகுதியும், பாதுகாப்புப் பெறும் தகுதியும் | ,, | (7) |
| சான்டகன் | குடியேற்றநாடு | ,, | (8) |
| புருனெய் | பாதுகாப்பு நாடு | ஹைகமிஷனர் | (9) |
| கூச்சிங் | குடியேற்றநாடு | கவர்னர் | (10) |
| கொழும்பு | டொமினியன் | கவர்னர் ஜெனரலும் முதன் மந்திரியும் | (11) |
| நிகோசியா | குடியேற்றநாடு | கவர்னர் | (12) |
| விக்டோரியா | குடியேற்றநாடு | கவர்னர் | (13) |
| புதுடெல்லி | குடியரசு | குடியரசுத் தலைவரும், முதன் மந்திரியும் | (14) |
| கோலாலம்பூர் | 2 ஒப்பந்தம் 9 பாதுகாப்பு | ஹைகமிஷனர் | (15) |
| சிங்கப்பூர் | குடியேற்றநாடு | கவர்னர் | (16) |
| கராச்சி | டொமினியன் | கவர்னர் ஜெனரலும், முதன் மந்திரியும் | (17) |
| கார்டோவும் | கூட்டுடொமினியன் | கவர்னர் ஜெனரல் | (18) |
| | | | (19) |
| மாசேரு | குடியேற்றநாடு | ஹைகமிஷனர் | |
| மாபேகிங் | பாதுகாப்பு | ,, | |
| ம்பபேன் | பாதுகாப்பு | ,, | |
| பால்டியர்ஸ்ட் | குடியேற்றநாடு | கவர்னர் | (20) |
| அக்கரா | குடியேற்றநாடு பாதுகாப்பு, டிரஸ்ட் | ,, | (21) |
| நைரோபி | குடியேற்றநாடு பாதுகாப்பு | ,, | (22) |
| போர்ட்லூயி | குடியேற்றநாடு | ,, | (23) |

| நாடுகளின் பெயர் | பரப்பு. (ச. மைல்) | மக்கள் தொகை (ஆயிரத்தில்) |
|---|---|---|
| (24) நைஜீரியா | 3,72,674 | 2,50,00 |
| (25) வடரொடீஷியா | 2,84,745 | 19,00 |
| (26) நியாசாலாந்து | 47,949 | 23,50 |
| (27) செயின்ட் ஹெலீனு | 95 | 5 |
| (28) செய்ச் செலீஸ் | 157 | 35 |
| (29) சையெர்ரா லியோன் | 27,925 | 18,58 |
| (30) சோமாலிலாந்து | 68,000 | 500 |
| (31) தென் ரொடீஷியா | 1,50,333 | 21,46 |
| (32) தென் மேற்கு ஆப்ரிக்கா | 3,17,725 | 430 |
| (33) தங்கனியாகா | 3,62,688 | 74,12 |
| (34) யுகண்டா | 93,981 | 49,55 |
| (35) தென் ஆப்ரிக்கா யூனியன் | 4,72,550 | 1,26,46 |
| (36) ஜான்சிபார் | 1,020 | 264 |
| **அமெரிக்காவில்:—** | | |
| (37) பகாமாஸ் | 4,403 | 78 |
| (38) பாராபடோஜ் | 166 | 212 |
| (39) பெர்முடா | 21 | 37 |
| (40) பிரிட்டிஷ் கினியா | 83,000 | 425 |
| (41) பிரிட்டிஷ் ஹாண்டுராஸ் | 8,867 | 67 |
| (42) கனடா | 38,43,144 | 1,38,93 |
| (43) பால்க் தீவுகள் | 4,618 | 2 |
| (44) ஜமெய்க்கா | 4,670 | 13,89 |
| (45) லேவார்டு தீவுகள் | 422 | 115 |
| (46) டிரினிடாட் டொபாகோ | 1,980 | 636 |
| (47) வின்ட் வார்ட் தீவுகள் | 821 | 277 |
| **ஆஸ்திரேலியா:—** | | |
| (48) ஆஸ்திரேலியா காமன்வெல்த் | 29,74,581 | 83,16 |
| (49) பிஜ்ஜி | 7,040 | 285 |
| (50) நியூ ஹெப்ரிடீஸ் | 4,633 | 48 |
| (51) நியாசா | 8 | 1 |
| (52) நியூஜிலாந்து | 1,03,939 | 19,61 |
| (53) நார்போக் தீவு | 13 | 1 |
| (54) பஸிபிக் தீவுகள் | 11,625 | 177 |
| (55) பாப்போவா நியூகுனிவா | 1,83,540 | 991 |
| (56) மேற்கு சமோவா | 1,133 | 82 |

| தலைநகர் | ஆட்சித்தொகுதி | ஆள்பவர் | |
|---|---|---|---|
| லாகோஸ் | குடியேற்றநாடு பாதுகாப்பு, டிரஸ்ட் | கவர்னர் | (24) |
| ஹுசாகா | பாதுகாப்பு | ” | (25) |
| சாம்பா | பாதுகாப்பு | ” | (26) |
| ஜேம்ஸ்டவுன் | குடியேற்றநாடு | ” | (27) |
| பிரீடவுன் | குடியேற்றநாடு, பாதுகாப்பு | ” | (28) |
| பிரீடவுன் | ” | ” | (29) |
| பெர்பரா | பாதுகாப்பு | ” | (30) |
| சாலிஸ்பர்ரி | தன்னாட்சிகொண்ட குடியேற்றநாடு | கவர்னரும், முதன் மந்திரியும் | (31) |
| விண்ட்ஹூக் | மான்டேட் | நிர்வாக அதிகாரி | (32) |
| டார்-எஸ்-லாம் | டிரஸ்ட் | கவர்னர் | (33) |
| எட்டெபே | பாதுகாப்பு | ” | (34) |
| பிரெடோரியாயும் கேப்டவுனும் | டொமினியன் | கவர்னர் ஜெனரலும் முதன் மந்திரியும் | (35) |
| ஜான்சிபார் | பாதுகாப்பு | ரெஸிடெண்ட் | (36) |
| நாஸா | குடியேற்றநாடு | கவர்னர் | (37) |
| பிரிட்ஜ்டவுன் | குடியேற்றநாடு | ” | (38) |
| ஹாமில்டன் | ” | ” | (39) |
| ஜியார்ஜ்டவுன் | ” | ” | (40) |
| பெல்ஜியா | ” | ” | (41) |
| ஒட்டவா | டொமினியன் | கவர்னர் ஜெனரலும், முதன் மந்திரியும் | (42) |
| போர்ட்ஸ்டான்லி | குடியேற்றநாடு | கவர்னர் | (43) |
| கிங்ஸ்டன் | ” | ” | (44) |
| செயின்ட் ஜான் | ” | ” | (45) |
| போர்ட் ஸ்பெயின் | ” | ” | (46) |
| செயின்ட் ஜியார்ஜெஸ் | ” | ” | (47) |
| கான்பெரா | டொமினியன் | கவர்னர் ஜெனரலும், முதன் மந்திரியும் | (48) |
| சூவா | குடியேற்றநாடு | கவர்னர் | (49) |
| வைலா | பிரெஞ்சு-பிரிட்டிஷ் கூட்டுடொமினியன் | பிரிட்டிஷ் ரெஸிடென்ட் | (50) |
| நிராசா | ஆஸ்திரேலியா பகுதி டிரஸ்ட் | நிர்வாக அதிகாரி | (51) |
| வெல்லிங்டன் | டொமினியன் | கவர்னர் ஜெனரலும் முதன் மந்திரியும் | (52) |
| நார்போக் | ஆஸ்திரேலியாவில் அடக்கம் | நிர்வாக அதிகாரி | (53) |
| பஸிபிக்ஐலாந்து | குடியேற்றநாடு, பாதுகாப்பு | ஹைகமிஷனர் | (54) |
| போர்ட் மார்ஸ்லி | ஆஸ்திரேலியாபகுதி, டிரஸ்ட் | நிர்வாக அதிகாரி | (55) |
| அபியா | நியூஜிலாந்து டிரஸ்ட் | நிர்வாக அதிகாரி | (56) |

இந்த அட்டவணைகளில் காட்டப்பட்ட குறிப்புகளின்படி சிறிதும் பெரிதுமான 56 நாடுகள், காமன்வெல்த் அமைப்பில் அடங்கி யிருக்கின்றன. அவையனைத்தும் "காமன் வெல்த்" என்ற ஒரே பெயரால் அழைக்கப் பட்ட போதிலும், ஆட்சி முறையும் அரசியல் உரிமைகளும் வேறுபாடுடையன. குறிப்பிடப் பட்டுள்ள ஆட்சிமுறைகளில் முக்கியமானவை, அரசன் ஆளும் தகுதி, குடியேற்றநாட்டுத் தகுதி, டொமினியன் தகுதி, பாதுகாப்புத் தகுதி, ஒப்பந்தத்தகுதி, டிரஸ்ட் தகுதி, குடியரசுத்தகுதி, என்று பலவகைப்படும். அத் தகுதிகளின் விளக்கம் வருமாறு:—

**அரசன் ஆளும் தகுதியாவது,**

பரம்பரை உரிமையோடு அரசன் உண்மை யாகவோ ஒப்பாகவோ அரசாங்க நடவடிக்கை கள் எல்லாவற்றிற்கும் பொறுப்பாக இருந்து ஆளுவது.

**குடியேற்றநாட்டுத் தகுதியாவது**

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் முடி, கட்டுப் படுத்தக் கூடிய சிலவகைக் கட்டுப்பாட்டுக்கு அடங்கியிருந்து, தன்னைத்தானே ஆண்டு கொள்வது.

**டொமினியன் தகுதியாவது**

பிரிட்டிஷ் பேரரசில், பிரிட்டனோடு எந்த வகையிலும் மேல் கீழ் என்ற வேறுபாடு இல் லாமல், உள்நாட்டு விவகாரங்களில் சமத்துவ நிலையில் தொடர்புகொண்டு, பிரிட்டிஷ் முடி யின் கீழ், பொதுநோக்கில் பொருந்தியிருந்து, தன்னைதானே ஆண்டுகொள்வது.

**பாதுகாப்புத்தகுதியாவது**

வேற்று நாடுகளின் தலையீடோ, படை யெடுப்போ ஏற்படா வண்ணம் பிரிட்டன் தனது பாதுகாப்பைத்தர, அந்தப் பாது காப்பை ஏற்றுக்கொண்டு பிரிட்டனுக்கு அடங்கி ஆண்டு வருவது.

**ஒப்பந்த தகுதியாவது**

பிரிட்டன் எப்படி ஆளவேண்டும் என்று சொல்லுகிறதோ அதனை அப்படியே ஏற்றுக் கொள்ள இசைந்து, அதன்படி பிரிட்டனுக் குப் பதிலாகத் தானே இருந்து ஆண்டு வருவது.

**டிரஸ்ட் தகுதியாவது**

தன்னாட்சி செய்ய திறமையற்றதாகக் கரு தப்பட்டு, பிரிட்டிஷ் அரசாங்கத்தைச் சேர்ந்த ஒருவரே நிர்வாகம் செய்வது.

**குடியரசுத் தகுதியாவது**

எந்த வகையிலும் பிரிட்டனின் ஆதிக்கத் திற்கு இடமில்லாமல், தன்னைத்தானே முழு மையும் ஆண்டு கொள்ளும் முழு உரிமையும் பெற்றுத், தோழமை வகையால் பிரிட்டனோடு சேர்ந்து காமன்வெல்த் கூட்டணியில் இருப்பது.

இங்கிலாந்து தீவின் பரப்பு மட்டும் 89 ஆயி ரம் சதுரமைல் ஆகும். ஆனால் அதனைத் தலை மையாகக் கொண்ட காமன்வெல்த் நாடுகளின் மொத்த நிலப்பரப்பு 1 கோடியே 29 லட்சம் சதுரமைல்களுக்கு மேல் ஆகும்! விகிதப்படி பார்த்தால், சிறிய தீவாகிய இங்கிலாந்து தன் னைப்போல் 145 மடங்கு அளவில் பெரிதான பகுதிகளை அடக்கியிருக்கிறது. இந்த அளவின் தன்மை கீழே காட்டப்பட்டுள்ள படத்தில் நன்கு விளங்கும்.



இங்கிலாந்தின் மக்கள் தொகை 4 கோடி 88 லட்சமாகும். காமன்வெல்த் நாடுகளின் மொத்த மக்கள் தொகை 59 கோடி 96 லட்சமாகும். அதாவது உலகில் நான்கில் ஒரு பகுதியினர் காமன்வெல்த் நாடுகளில் வாழ்கின் றனர். விகிதப்படி பார்த்தால், ஒரு ஆங்கிலே

யனுக்கு உதவியாகவோ, ஊழியஞ் செய்யவோ பதினொரு பேருக்குமேல் காமன்வெல்த்தில் இருக்கின்றனர்.



ஒவ்வொரு ஆங்கிலேயனுக்கும்



உதவியளிக்கும் காமன்வெல்த் நாட்டினர்.

பல்வேறு நாடுகள் ஒன்று கூடி அமைப்பு ஏற்படுவதில் பல நன்மைகள் இருக்கின்றன. ஆனால் அத்தகைய அமைப்பில் கலந்து கொள்ளும் எல்லா நாடுகளுக்கும் ஒத்த உரிமையும், ஒத்த மதிப்பும் இருக்க வேண்டும். காமன்வெல்த் அமைப்பில் இந்தத் தன்மை இல்லை.

கட்டி ஆளுவதில் இனி லாபம் இல்லை என்ற நிலையிலும், எதிர்ப்பை இனிச் சமாளிக்க முடியாது என்ற நிலையிலும் இங்கிலாந்து தன் கீழிருந்த நாடுகளுக்கு உரிமைகளைத் தர வேண்டியநிலை வந்தது. இரண்டாவது உலகப் போருக்குப் பின் உரிமை கிடைத்த நாடுகளில் பர்மா முழுவதும் பிரித்துக்கொண்டு வெளியேறிவிட்டது. அது காமன்வெல்த் அமைப்பில் சேர மறுத்துவிட்டது. இந்தியா மட்டும் குடியரசு நாடாக விளம்பரப் படுத்தப்பட்ட பிறகும், காமன்வெல்த் அமைப்பிலேயே இருக்க இணங்கிவிட்டது. முழுச் சுதந்திரத்துக்காகப் போராடிய காங்கிரசும், வீரர் ஜவஹர்லாலும்தான் இந்த ஏற்பாட்டை முன்னின்று நடத்தி வைத்தனர்!

காமன்வெல்த் என்று பெயர் மாற்றப்பட்ட போதிலும், பழைய ஏகாதிபத்தியத்தின் மூர்க்கத்தன்மையும், கொடுமையும் இன்னும் பல நாடுகளில் காணப்படுகின்றன. மலேயாவில் துப்பாக்கிச் சத்தம் கேட்டபடி இருக்கிறது; கென்யாவில் அடக்குமுறை நாட்டுமக்களை வேட்டையாடியபடி இருக்கிறது; சூயஸ் பகுதியில் எஃகுத்தொப்பியணிந்த போர் வீரர்கள் நடமாடியபடி இருக்கின்றனர்; பாரசீகத்துடன் பகைமை கொண்டு ஏடன் அருகே போர்க்கப்பல்கள் உலவியபடி இருக்கின்றன.

தென்னாப்பிரிக்காவும், இந்தியாவும் ஒரே காமன்வெல்த்தில்தான் இருக்கின்றன. ஆனால் இந்தியன் அங்கே ஒதுக்கித் தள்ளப்படுகின்றான்.

ஹாங்காங்கும், ஆஸ்திரேலியாவும் ஒரே காமன்வெல்த்தில் இருக்கின்றன. ஆனால் ஹாங்காங்கைச் சேர்ந்த ஒரு சீனன் ஆஸ்திரேலியாவில் குடியேற முடியாது, வெள்ளை நிறக் கொள்கை என்பதின் பேரால், வெள்ளையர்கள் மட்டுமே ஆஸ்திரேலியாவில் குடியேற அனுமதிக்கப்படுகின்றனர். ஆசியா நாட்டினருக்கு அங்கு இடம் கிடைக்காது.

அதே போல் ஆப்ரிக்காவைச் சேர்ந்த நீக்ரோ, காமன்வெல்த்தில் ஒரு நாடான கானடாவுக்கு கூலி வேலை செய்யும் அடிமையைப் போலச் செல்ல முடியுமே தவிர, ஒத்த உரிமைபெற்ற குடிமகனைச் செல்ல முடியாது. கானடாவில் குடியேறும் உரிமை இங்கிலாந்தைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும்தான் பெரும்பாலாக அளிக்கப்படுகிறது.

காமன்வெல்த் முறையில், இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவன் ஒவ்வொரு காமன்வெல்த் நாட்டிலும் வியாபாரம் செய்யக் கிடைக்கும் வசதிகளும், உரிமைகளும் ஒரு காமன்வெல்த் நாட்டுக்கு மற்றொரு காமன்வெல்த் நாட்டிடம் கிடைக்காது. உதாரணமாக இங்கிலாந்தின் சாமான்கள் ஆப்ரிக்காவிலோ ஆஸ்திரேலியாவிலோ அனுமதிக்கப்படுகிற அளவு, இந்தியாவின் பண்டமோ, பாகிஸ்தான் சரக்கோ அனுமதிக்கப்படமாட்டாது. இதனால் இங்கிலாந்தின் பொருளாதாரப் பிடியில் காமன்வெல்த் நாடுகளனைத்தும் சிக்கியிருக்கின்றன.

காமன்வெல்த் முறையில் காணப்படும் குறைகளைக் கண்டுதான், திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதல் மாநிலமாநாட்டில், ஒத்த மதிப்பும், நேசப்பாண்மையும் நிலவாத வரையில் காமன்வெல்த் அமைப்பில் இந்தியா இருப்பதால் பயனில்லை என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. காமன்வெல்த் "அடிமை நாடுகளின் சிறைக்கூடமாக" இருக்கிறது. இந்த நிலை மாறுதவரை, இந்தியா அந்த அமைப்பிற்கு ஆதரவு தருவது ஏகாதிபத்தியத்தையும், அடிமைத் தனத்தையும் ஒருங்கே ஆதரிப்பதாகவே முடியும்.

**இரா. செழியன்.**

# குடிசை—பொறித் தொழில்கள்

உற்பத்தியைப் பெருக்கி உலகநாடுகளை வளைக்க வேண்டும் என்ற எண்ணம். எல்லா நாடுகளிலும் உருவாகிச், செயலாற்றலிலே இறங்கியுள்ளது.

உற்பத்திக்கு மனித உழைப்பு அடிப்படையானது. நாகரிகம் தோன்றிய நாளிலிருந்து மனிதன் உழைத்துக்கொண்டேயிருக்கிறான், என்றாலும் அவனது தேவைகள் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை.

உற்பத்தியை எளிதாக்கவும், விரைவுபடுத்தவும், விரிவாக்கவும். பெருக்கித்தரவும் விஞ்ஞானம் தன்னாலியன்ற அளவுக்கு உதவிபுரிந்து வருகிறது; என்றாலும் மனிதனின் தேவைகள் நிறைவேற்றப்படவில்லை.

புதியகால விஞ்ஞானக் கருவிகளும். பொறிகளும் தோன்றுவதற்கு முன்பு. குடிசைத்தொழில்கள் மூலமே பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

குடிசைத்தொழிலில் செய்யப்பட்ட ஒரு பொருளை. பொறித்தொழில் (யந்திரத்தொழில்) செய்யக்கற்றுக் கொண்டுவிட்டால். அதனால் ஏற்படும் பயன்கள் என்னவென்றால்: (1) மனிதனின் உழைப்பு குறைகிறது. (2) உற்பத்தி அதிகமாகி பயன் விரிகிறது. (3) ஓய்வு நேரம் மிகுகிறது. (4) இன்பம் பெருகுகிறது

குடிசைத் தொழில்கள் மூலமே பொருள்கள் உற்பத்தி செய்யமுடியும் என்றிருந்த காலத்திலும் சரி, குடிசைத் தொழில்களையே சிலர்நம்பி வாழும் இந்தக் காலத்திலும் சரி அந்தத் தொழில்களில் ஈடுபட்டுள்ள பெரும்பாலோரைக் கவனித்தால், ஒரு நாளின் 24 மணிநேரத்தில், 11 மணிநேரம் வேலை செய்யவேண்டியவர்களாகவும். 8மணி நேரம் உறங்கவேண்டியவர்களாகவும், மூன்றுமணி நேரமட்டுமே உண்ணுவதற்கு-ஆடிப்பாடிக் களிப்பதற்கான ஓய்வு நேரம்பெற்றவர்களாகவும் இருந்து வருவதைக் காணலாம். கீழே உள்ள படம் இதனைத் தெளிவுபடுத்தும்.

குடிசைத் தொழிலிலீடுபட்டுள்ளவர்களின் வாழ்க்கையைப் பொதுபடையாகக் கணக்கிட்டால், அவர்கள்




காலை 6மணிக்கு எழுபவர்களாகவும். பிறகு 7மணிக்கு வேலைக்குப் போகவேண்டியவர்களாகவும். இரவு 8 மணிக்கு வீடுதிரும்ப வேண்டியவர்களாகவும். இரவு 10மணிக்குப் படுக்க வேண்டியவர்களாகவும் இருக்கக் காணலாம்.

பொறித் தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் இன்றைய நிலையை உற்று நோக்கினால். ஒரு நாளின் 24மணிநேரத்தில் 8மணிநேரம் வேலைக்கும், 8மணிநேரம் தூக்கத்திற்கும். 8மணிநேரம் ஓய்வுக்கும் செலவழிக்கக் கூடியவர்களாக இருக்கக் காணலாம். கீழேயுள்ள படம் இதனை விளக்கும்.




பொறித்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள், பொதுப்படையாகக் கணக்கிடும்போது காலை 6 மணிக்கு எழுந்து, காலை 10மணிக்கு வேலைக்குப்போய். மாலை 6மணிக்கு வீடுதிரும்பி. இரவு 10மணிக்கு உறக்கம் கொள்ளப் போகிறவர்களாக இருப்பதைக் காணலாம்.

மனிதனின் உழைப்பு குறைந்து. ஓய்வு பெருகி, பயன்மிகுந்து, தேவை நிறைவேற்றப்படவேண்டுமானால் கைக்கொள்ளப்படவேண்டியது பொறித் தொழில்தான்.

பொறிகள் நுழைய முடியாத தொழில்கள், அதாவது குடிசைத் தொழில்களாக மட்டுமே இருந்து வரக்கூடிய தன்மையுடைய தொழில்கள் எனப்படுவனவின்று நிலவினாலும். பொறிகள் ஈடுபடமுடியும், பொருள்களை மிகவாக உற்பத்தி செய்யமுடியும் என்ற நிலையில், பொறித் தொழிலைக் கடைபிடித்தால்தான். மனித சமுதாயத்தின் உழைப்பின் நேரத்தைக் குறைக்க முடியும். இல்லையேல் உழைப்பு மிகத் தேவைப்படும்; ஓய்வுநேரம் மிகக்குறைந்துவிடும்; தேவைகள் நிறைவேறாமல் போய்விடும்.

எனவே குடிசைத் தொழிலிடத்துப் ‘பக்தியும்.’ பொறித் தொழிலிடத்து ‘வெறுப்பும்’ கொள்ளாமல், இரண்டிடத்தும் ‘பகுத்தறிவை’ச் செலுத்தமுற்பட்டால் எதிர்பார்க்கும் பலன் உறுதியாக எய்தப்பெறும்.

# கிளியின் வாழ்வு!

(ஏற்ற பண் இசைக்க)

[புதுவை ச. சிவப்பிரகாசம்]

பச்சைப் பசுங் கிளியே — உனக்குப்
பாலும் பழம் தருவேன்!
இச்சையுடன் வருவாய் — நீயும்
என்னோடு பேசிடுவாய்!

உன்றன் நிலை யறிந்தேன் — ஆ! ஆ!
உள்ளம் மிக மகிழ்ந்தேன்!
என்றும் சுந்தரமாய் — நீதான்
இருக்கும் வித மறிந்தேன்!

வாழ்வை வெறுப்ப தில்லை — எழிலார்
வண்ணப் பசுங் கிளியே!
தாழ்வு மனப்பான்மை — கொண்டே
தரணியில் வாழ்வதில்லை!

சொந்த முயற்சி யின்றி — வீணே
சோம்பி யிருப்பதில்லை!
எந்தச் செயல் தனக்கும் — 'விதி'என்
றேங்கி யிருப்பதில்லை!

இன்ப மிகும் வாழ்வில் — நீதான்
என்றுங் களித்திடுவாய்!
துன்பந் தனை யறியாய் — உன்றன்
துணையினைக் கீழ்ப் படுத்தாய்!

அறிவு பெறு மாந்தர் — உன்னிடம்
அறியும் பொருள் பலவே!
நிறைவு மிகு வாழ்வின் — வழியை
நீயவர்க் கோதிடுவாய்!

# நோக்கம் வேறு வேறு!

—[O0O]—

ஒரு காட்டில் ஒரு வேட்டை நாய் உலவிக்கொண்டு வந்தது. புதருக்கருகில் சிறு சத்தம் கேட்டு, மெதுவாகப் பார்த்தது. அங்கு ஒரு முயல் உட்கார்ந்திருப்பது தெரிந்தது; உடனே அதன் மீது பாய்ந்தது. வேட்டை நாய் பிடிப்பதற்கு முன், முயல் தப்பி ஓட ஆரம்பித்தது. நாய் விட வில்லை. பின்னால் துரத்திக்கொண்டு ஓடியது.

இரண்டும் காட்டில் வெகுதூரம் ஓடிவிட்டன. நாய் எவ்வளவு பாடுபட்டு ஓடியும், முயலைப் பிடிக்க முடியவில்லை. கடைசியாகச் சோர்ந்து நாய் நின்றுவிட்டது.

அப்பொழுது அந்தப்பக்கம் வந்த நரி, "பூ! ஒரு முயலைப் பிடிக்க உன்னால் முடிய வில்லையே!" என்று ஏளனம் செய்தது.

அதற்கு நாய், "ஆமாம் எனது ஒரு வேளை உணவுக்காக நான் ஓடினேன். முயலோ தன் உயிருக்காகவே ஓடியது. அதனால் தான் முடியவில்லை" என்று பதிலளித்தது.

*சிறு கதை*

# சித்தி முருகானந்தர்

(இரா. செழியன் எம். ஏ.)

அன்று கிருத்திகை நாள். காலையிலிருந்தே மலையடிவாரத்திலிருந்து தீர்த்தபுரி மடத்தை நோக்கி மக்கள் கூட்டங் கூட்டமாகப் போய்க்கொண்டிருந்தனர்.

தீர்த்தபுரி மடத்தில் முருகானந்தசாமிகள் என்பவர் இருந்தார். அவர் இமயமலைச் சாரலிலும், சிறுமலைக் குகையிலும் பதினான்கு வருஷங்களுக்கு மேல் தவமிருந்தாரென்றும், காயகல்பத்தில் முதிர்ந்து ஞானியாகிவிட்டாரென்றும், சித்தர் பரம்பரையைச் சேர்ந்தவரென்றும், அவரைப்பற்றிக் கூறப்பட்டது. அதனாலேயே அவர் சித்தி முருகானந்தசாமி என்று குறிப்பிடப்பட்டார். அவரைப் பற்றிய மற்றொரு கதையும் இருந்தது. அதாவது அவர் தீர்த்தபுரிக்குப் பக்கத்திலுள்ள மலையில் தவமிருந்த பொழுது, வயிற்று நோயால் மிகவும் கஷ்டப்பட்டாராம்; அதைக் கண்டதும் அவர் வழிபட்ட முருகப் பெருமான் ஒரு யோகி போலத் தோன்றி, பிரணவ மந்திரத்தை ஓதி, திருநீற்றைப் பூசி, பக்கத்திலிருந்த மூலிகை ஒன்றைப் பறித்துப் பக்தனிடம் கொடுத்து•விட்டு மறைந்தாராம். அந்த மூலிகையைத் தின்றதும் முருகானந்தருடைய நோய் நீங்கியதாம். பின் மலையடிவாரத்திலிருந்த தீர்த்தபுரி மடத்தில், முருகானந்தர் தங்கி, தனக்குக் கிடைத்த மூலிகையை நோய் நொடி வந்த ஒவ்வொருவருக்கும் முருகப் பெருமானின் திருநாளான கிருத்திகை நாளன்று கொடுத்து அவர்களின் துன்பத்தைப் போக்கும் திருப்பணியில் ஈடுபட்டார்.

கிருத்திகை நாளன்று மட்டும்தான் முருகானந்தசாமிகளை எல்லோராலும் பார்க்க முடியும். மற்ற தினங்களில் ஒரு தனியறையில் அவர் யோகத்திலும், திருமறைகளைப் புரட்டுவதிலும் இருப்பார். அப்பொழுதெல்லாம், அவருடைய வசதிகளைக் கவனிக்க வரும் மடத்தைச் சேர்ந்த ஓரிருவரும், மடத்திலே செல்வாக்குள்ள சில கனதனவான்களையும் தவிர வேறெவரும் சாமிகளைப் பார்க்க முடியாது.

கிருத்திகை நாளன்று மடத்திலுள்ள பெரிய கூடத்தின் உயர்ந்த மேடையில் அவர் வந்து உட்காருவார். அவர் உட்கார்ந்திருப்பது வெறும்கோரைப்பாயில்தான். மேடைக்குப்பக்கத்தில் முருகப் பெருமானின் திருவுருவப் படம் அலங்கரிக்கப்பட்டு இருக்கும். பொன்னால் செய்த குத்துவிளக்கு எரியும். பூஜை முடிந்த பின், தரிசிக்க வந்தவர்கள் ஒவ்வொருவரும் சித்தி சாமிகளின் முன் விழுந்து வணங்குவார்கள். அவர்களை ஆசிர்வதித்து திருநீற்றை அருளுவார். நோயாளியாயிருந்தால், ஓம் மந்திரத்தை ஜபித்து, பட்டுப் பையிலிருக்கும் திருநீற்றை அந்தப் பிணியாளன் மீது தெளித்து, வெள்ளிப்பாத்திரத்தில் வைக்கப் பட்டிருக்கும் மூலிகையைக் கொடுப்பார். அதற்காக முருகானந்த சாமிகள் எந்தப் பணமும் கேட்பதில்லை. ஆனால் வருபவர்கள் தாங்களாகவே விரும்பி எதிரில் வைக்கப்பட்டிருந்த பெரிய உண்டியலில் தங்கள் காணிக்கைகளைப் போடுவார்கள். பொன்னும் வெள்ளியும், நகையும் பணமும் ஏராளமாக அதில் விழுந்தன. மூலிகையின் பெருமை நாடெங்கும் பரவியது. தீர்த்தபுரி மடத்தை நோக்கி வரும் கூட்டமும் அதிகரித்தது.

மூலிகையைப் பெற்று, நோய் நீங்கி குணமடைந்தவர்கள் முருகானந்தரைப் பற்றிப் புகழ்ந்து கொண்டிருக்கும் பொழுது, "எல்லாம் வெறும் போலி" என்று ஒருசிலர் கூறாமலில்லை. அப்படிக் கேட்டால்கூட, முருகானந்தசாமிகள் கோபித்துக்கொள்வதில்லை. ஒரு சமயம், தனது நோய்க்கு மருந்து ஏதோ கொடுப்பார் என்று எதிர்பார்த்துவந்த ஒருவன், விபூதியையும், கசக்கித்தரப்பட்ட மூலிகையையும் பார்த்தபின், "என்ன இது, சாம்பலும் இலையும்" என்று வாய்தவறிக் கூறிவிட்டான். உடனே பக்கத்திலிருந்த முருகனது பக்த கோடிகள், முருகனுடைய ஆயுதமான வேலை எடுத்து அவனை அடிக்க வந்தனர். ஆனால் அருட்பெரும் அன்பரான சித்தி முருகானந்தர், அவர்களைத் தடுத்து, மாலையில் நடந்த

உபன்யாசத்தில் அவர் பின்வருமாறு போதித்தார். "அன்பர்களே! கோபப்படுவதால், முருகன் அருள்புரியமாட்டார். திருநீற்றின் பெருமையையும், மூலிகையின் அருமையையும் தெரியாதவன் அவ்வாறு சொன்னான். இந்த விபூதிதான் மருள்நீக்கியாரின் நோயைத் தீர்த்து, சமண சமயத்திலிருந்து சைவ சமயத்துக்கு அழைத்து வந்தது. விபூதி அணிவதால் வியாதி நாசமாவதுடன் பாபங்கள் நீங்கிப் பரிசுத்த வானாகி மோட்சமடைவான். மேலும் மூலிகையைப் பார்த்து இலை என்று சொன்னால் என்ன? இதை உண்டால், நோய் இலை, துன்பம் இலை."

காலையில் சித்தி முருகானந்தர் பக்தர்களுக்குக் காட்சியளித்ததும், மாலையில் இது போன்று உபன்யாசங்கள் புரிவார். பக்தி மார்க்கம், திருமுறை விளக்கம் இவைகளுடன் அரசியல் தருமம், மழை வாராததன் காரணம், சமாதானம் வேண்டுமென்பதற்குச்சைவ மறைகளில் வரும் மேற்கோள்கள் இவைகளைப் பற்றியும் கூறுவார். இவரைத் தரிசித்து மூலிகையின் பலனைப் பெறவும், உபதேசங்களைக் கேட்கவும் மக்கள் ஏராளமாக வந்தனர். பெரிய மனிதர்கள் காரில் வந்தனர். வசதி இல்லாதவர்கள் நடந்து வந்தனர்; நடக்க முடியாதவர்கள் தூக்கிவரப்பட்டனர். இப்படி வருகிற கூட்டத்திற்குக் குறைவில்லாமலிருந்தது.

அதிலும் அன்று கார்த்திகை மாதத்துக் கிருத்திகையானதினால், தீர்த்தபுரி மடத்தை நோக்கிப் போகிறவர்கள் அதிகமாயிருந்தனர். போகிற கூட்டத்தைப் பார்த்தபடி ஆறுமுகம் மட்டும் தனியாக ஒரு மரத்தடியில் நின்று கொண்டிருந்தான். அந்தப் பெருங்கூட்டத்தைப் பார்க்கும் பொழுது அவனுக்கு வருத்தமாக இருந்தது. ஆறுமுகம் குருவி ஜோஸ்யம் சொல்லிப் பிழைத்துக் கொண்டிருந்தான். ஏராளமான வரும்படியை எதிர்பார்த்துத்தான் தீர்த்தபுரி நோக்கி வந்தான். ஆனால் வருகிற வழியில், கூண்டிலிருந்த குருவி-மற்றவர்களின் விதியை நிர்ணயித்துக் கொண்டிருந்த குருவி செத்துவிட்டது. குருவியில்லாமல் வெறும் கூண்டையும் ஜோஸ்ய அட்டைகளையும் வைத்துக்கொண்டு என்ன பயன்? வழி நெடுக இருந்த கடைக்காரர்கள், வேடிக்கை காட்டுபவர்கள், கைரேகை பார்ப்பவர்கள், குறி சொல்லுபவர்கள் இவர்களுக்கெல்லாம் நல்ல வருமானம் கிடைத்தது. பாவம்! ஆறுமுகத்துக்கு மட்டும் வருமானத்துக்கு வழியில்லாமல் போய்விட்டது. என்ன செய்வதென்று வருத்தத்துடன் உட்கார்ந்திருந்த ஆறுமுகத்துக்குத் திடீரென்று ஒரு யோசனை தோன்றியது. பக்கத்திலிருந்த புதரில் குருவிக் கூண்டையும் ஜோஸ்ய ஏடுகளையும் போட்டுவிட்டு, மரத்தடியில் வந்து யாரும் பார்க்காத சமயத்தில் படுத்துக் கொண்டான்.

சிறிது நேரத்தில் ஆறுமுகத்தின் கைகால்கள் முடங்கி விட்டன, கண்கள் சுழன்றன, பெருமூச்சு விட்ட வண்ணம், "ஐயோ! ஐயோ!" என்று முணகிக் கொண்டிருந்தான். உடனே மடத்துக்குப் போய்க்கொண்டிருந்த கூட்டத்தில் ஒரு பகுதி முடங்கிக் கிடந்த ஆறுமுகத்தைச் சூழ்ந்துகொண்டது.

"பாவம்! யாரோ முடக்குவாதக்காரன் சித்தி சாமிகளைப் பார்க்க வந்திருக்கிறான். அவனைத் தனியே விட்டுவிட்டு மற்றவர்கள் போய்விட்டார்கள்."

"இது முடக்குவாதமில்லை, பக்கவாதம். எங்க பெரிய மாமனுக்குக்கூட இருந்தது. அதனால்தான் அவர் செத்தார்."

"இவனைச் சித்தி சாமிகளிடமே கொண்டு போய் விட்டுவிடலாம்" என்று ஒருவன் யோசனை சொன்னான்.

கடைசியாக நாலைந்துபேர் கூடி, ஆறுமுகத்தைத் தூக்கிப் போய் முருகானந்தர் சந்நிதியில் விட்டனர். ஆறுமுகத்தின் நிலையைப் பார்த்ததும் சித்தி முருகானந்தருக்குத் திகைப்பும், அருவருப்பும் உண்டானது. இவ்வளவு கடுமையான நோய் பிடித்தவனை அவர் பார்த்ததில்லை. நோயாளியைப் பார்த்தால், பத்து ஆண்டுகளுக்கு மேல் அந்த வியாதியால் பாதிக்கப்பட்டவன் போலக் காணப்பட்டான். நிலைமையைச் சமாளிக்கச் சித்தி சாமியார் கண்ணை மூடிக்கொண்டு, "முருகா! முருகா!" எனச் சிறிது நேரம் ஜபித்துவிட்டு, விபூதியைத் தூவி மூலிகையை அருளினார். தன் முடங்கிய கையால், மூலிகையை மிகவும் கஷ்டப்பட்டு வாயில் போட்டுக்கொண்டான் ஆறுமுகம். மற்றொரு அன்பர் நெருங்கியதும், ஆறுமுகத்தைப் போகச் சொல்லி முருகானந்தர் கையை அசைத்தார். உடன் வந்தவர்கள் ஆறுமுகத்தைத் தூக்கிப் போக முன்வந்தனர். ஆனால் அவர்களை எட்டிபோகச் செய்து ஆறுமுகம்

உடலால் நகர்ந்து, நகர்ந்து, சித்தி முருகா னந்த சாமிகளைச் சுற்றி மூன்று முறை வலம் வந்தான். கடைசியாக முடங்கிய கைகளைச் சேர்த்து முருகானந்தர் முன் மண்டியிட் டான். அப்புறம் இதுவரை யாருமே கண்டி ராத அதிசயம் ஒன்று நிகழ்ந்தது.

முடங்கிக்கிடந்த ஆறுமுகத்தின் ஒரு கை மெதுவாக நீண்டது, விரல்கள் ஒவ்வொன்றாக நிமிர்ந்தன, கையும் காலும் சரியாகி வந்தன. முகத்திலே இருந்த வேதனை மறைந்தது. தள் ளாடி எழுந்து, கையைக்குவித்து, "ஆண்டே! அடைக்கலம்" என்று ஆறுமுகம் சித்தி முருகா னந்தரின் காலடியில் விழுந்துவிட்டான்.

அதிசயம் நிகழ்ந்ததைக் கண்டதும், கூட் டத்திலிருந்து பேரொலி கிளம்பியது; வெளி யிலே இருந்த அன்பர்கள் ஆரவாரித்தனர்.

"அதிசயம்! அதிசயம்!"

"ஆமாம்! நான்தான் பக்கத்தில் இருந்து கண்ணாரப் பார்த்தேன்."

"நான்தான் தூக்கிக்கொண்டு போய் போட் டவன்."

"எல்லாம் சித்திச்சாமி கொடுத்த விபூதியின் பெருமை, மூலிகையின் மகிமை."

கூடியிருந்த மக்கள் இதைப் பற்றியே அன் றெல்லாம் பேசிக்கொண்டனர்.

"கலிகால அதிசயம்" என்று பத்திரிகைகள் கொட்டை எழுத்தில் எழுதின.

"தெய்வாம்சம் இன்னும் அழிந்துவிட வில்லை" என்று அரசியல் தந்திரிகள் கூறி னார்கள்.

"சித்திச் சாமிகளின் மூலிகையை எல்லா ஆஸ்பத்திரிகளிலும் ஏன் கட்டாயமாக உப யோகப்படுத்தக் கூடாது?" என்று அசெம் பிளியில் கேள்வி கேட்டதாகப் பத்திரிகைகளில் செய்தி வந்தது.

சித்தி முருகானந்த சாமிகளின் பெயர் எங்கும் பரவியது. அதிசயம் நிகழ்வதற்குக் காரணமாயிருந்த ஆறுமுகம் மடத்திலேயே தங்கி விட்டார். முருகானந்தரைப் பார்க்க வருபவர்கள் ஆறுமுகத்தைப் பார்க்காமல் போவதில்லை. முருகானந்தரின் பூஜையின் போதும், பக்கத்திலேயே ஆறுமுகச்சாமிகள் அமர்ந்திருப்பார். மடத்தில் முருகானந்தருக்கு அடுத்தபடி ஆறுமுகத்துக்குத்தான் செல் வாக்கு இருந்தது.

ஒரு கிருத்திகை நாளன்று, முருகானந்த ருக்குத்திடீரென்று மயக்கம் வந்தது. உடனே ஆறுமுகச்சாமியும் மற்றவர்களும் கூடி அவ ரைத் தூக்கிப் போய் தனியறையில் மெத்தை யில் போட்டார்கள். மற்றவர்களைக் கூட்டம் போடாமல் போகச் செய்து ஆறுமுகச்சாமி மட்டும் தண்ணீர் தெளித்து மூர்ச்சை தெளிய வைத்தார். மூர்ச்சை தெளிந்ததும், இருத யத்தில் படபடப்பும், நெஞ்சில் வலியும், மேலே வேர்வையும் வந்தன.

"அப்பனே! முருகா! வலி தாங்க முடிய வில்லையே!" என்று சித்திச்சாமியார் முன கினார்.

வெளியில் போயிருந்த ஆறுமுகச்சாமி ஓடி வந்து, "சாமி! கொஞ்சம் வாயைத் திறக்கி றீர்களா?" என்று பணிவுடன் கேட்டார்.

"ஏன்?" என்றார் குரு.

"நோயைப் போக்க மருந்து!"

"சரி போடு!" என்று முருகானந்தர் வாயைத் திறந்தார், ஆறுமுகச்சாமி தன் கையி லிருந்த மருந்தைப் போட்டார்.

"அட பாவி! என்னடா போட்டாய்" என்று முருகானந்தர் எழுந்து உட்கார்ந்தார்.

"நீங்க கொடுக்கும் மூலிகை தாங்க!"

"எனக்கேவா அந்த ஆடாதொடை இலையைத் தருகிறாய்!" என்று குரு கூச்சல் போட்டார்.

"முருகா! முருகா! ஏதோ அஞ்ஞான அதிர்ச்சியால் சாமி அப்படிச் சொல்லு கிறீர்கள். மூலிகையை இலை என்று சொல்ல லாமா? இதை உண்டால் நோய் இலை, துன் பம் இலை" என்று சிஷ்யன் பாடத்தை ஒப் பித்தான்.

அதற்குள் என்ன சத்தம் என்று கேட்டுக் கொண்டு கனதனவான்கள் இரண்டுபேர் உள்ளே வந்துவிட்டனர். "நோய் வந்ததும் சாமி மூலிகையைக் கொண்டு வரும்படிச் சொன்னார். நான் கொண்டு வரத் தாமதித்த தால் சாமிக்குக் கோபம் வந்து விட்டது. அவ்வளவுதான்" என்று ஆறுமுகச்சாமி சொன்னார்.

"அவருக்கில்லாத மூலிகை வேறு யாருக் கிருக்கிறது." என்று கூறி இன்னும் அதிகமா கக் கொண்டு வந்து முருகானந்தர் முன் இரண்டுபேரும் வைத்தனர். வேறு வழியின்றி மூலிகையில் கொஞ்சம் வாயில் போட்டுக் கொண்டு, திருநீற்றைப் பூசிக் கொண்டார் முருகானந்தர்.

அந்த அறையை விட்டு அசையாமல் ஆறு முகச்சாமி இருந்தார். வேண்டும் பொழுதெல்

லாம் மூலிகையையும் விபூதியையும் முருகானந்தருக்கு நிறையத் தந்தார். சிஷ்யனின் இடைவிடாத பணிவிடையால், முருகானந்தர் ஒரு வாரத்திற்கெல்லாம் நோய்த் துன்பத்துடன், இப்பிறவித் துன்பத்தையும் விட்டு நீங்கி 'இறைவன் உலகம்' சேர்ந்தார்.

அடுத்தபடி ஆறுமுகம், சித்தி ஆறுமுகானந்தர் என்ற பெயரில் மடத்துக்கு அதிபதியானார்!

---

இலக்கியம்

# காதற் காட்சிகள்

## I

நீண்டசாலை. அதிலிருந்து பிரிந்து, வளைந்து, நெளிந்து செல்லும் ஒற்றையடிப் பாதை. அதனை அடுத்துத் தினைப்புனம். பக்கத்தில் அடர்ந்த மாந்தோப்பு. மாந்தோப்பின் நடுவே பனைமட்டைகளால் வேயப்பட்ட சிறு குடிசை. குடிசையில் தோப்பைக் காவல்காத்துவரும் காவல்காரன், அவன் மனைவி. அவர்களோடு அவர்களது அருமை மகள், அந்தச் சோலைக்கே அழகு தரும் ஆடும் மயில் போன்றவள்.

மாந்தோப்பு விரிந்து பரந்து கிடக்கிறது. எங்குபார்த்தாலும் மாவிலை மெத்தைகள். பெரிய உயர்ந்த மாமரம் ஒன்றில் கயிற்று ஊஞ்சல் ஒன்று தொங்கிக்கொண்டிருக்கிறது. வேலையற்ற போது அந்தக் கயிற்று ஊஞ்சலில் உட்கார்ந்து, பாட்டுப் பாடி ஆட்டம் ஆடுவது, அந்தப் பெண்ணழகியின் பொழுதுபோக்கு. சில சமயங்களில் அக்கம் பக்கத்துத் தினைப் புனத்துப் பெண்களோடு சேர்ந்து கும்மியடித்தும், குரவைக் கூத்து ஆடியும், ஓடிவிளையாடியும் மகிழ்ச்சியில் திளைத்திருப்பதும் உண்டு.

ஒருநாள் அந்தப் பெண்ணரசி ஊஞ்சலில் ஒய்யாரமாக ஆடிக்கொண்டு, மெல்லிய குரலில் இன்னிசை எழுப்பிக்கொண்டிருக்கிறாள். மாந்தோப்பின் வேலியருகில் ஒற்றையடிப் பாதையில், கட்டிளங்காளையொருவன் யானை வேட்டைக்காகச் செல்கிறான். மாந்தோப்பின் வனப்பு அவன் கண்ணைக் கவர்கிறது. அவன் காதில் மெல்லிய இனிய குரல் மெல்ல நுழைந்து, இதய நாடிகளைத் தடவுகிறது. குரலோசை வந்தப் பக்கம் திரும்புகிறான். ஏதும் புலப்படவில்லை நிற்கிறான்; உற்று நோக்குகிறான். குரலிசைச் சென்று சென்று மீளுவதுபோல் படுகிறது. அடர்ந்த மரக்கிளைகளுக்கு இடையிலுள்ள சந்தின் வழியாக ஊசலாடும் பெண்ணழகியைக் காண்கிறான். இன்ப உணர்வு, காண்டல் மாத்திரத்திலேயே அவன் உடலிலுள்ள இரத்தக் குழாய்களில் ஓடி ஒடுங்குகிறது. அவளது முழுத்தோற்றத்தையும் கண்டு களிக்கும் நினைப்போடு, அந்த வாய்ப்பை அளிக்கும் இடத்தில் மெல்ல நகர்ந்து நிற்கிறான். தையலின் சாயலிலே மயங்கிவிடுகிறான். மதிமயக்கம் கைப்பிடியைத் தளரச் செய்கிறது. உடனே கையிலிருந்த வில், காய்ந்த சருகுகள் மேல் விழுந்து, ஓசையை எழுப்புகிறது. உடனே தன்னிலையுணர்ந்து, வில்லை எடுக்க விரைந்து குனிகிறான். ஏதோ சத்தம் எழும்புவதைக் கேட்டு அத்தலைமகள் திடுக்கிட்டு, ஊஞ்சலாட்டத்தை நிறுத்தி விட்டுச் சுற்றுமுற்றும் பார்க்கிறாள். வில்லைக் குனிந்து எடுத்து நிமிர்கிற வீரன் ஒருவனைப் பார்க்கிறாள்; அவன் தன்னையே உற்று நோக்குவதையும் உணர்கிறாள். நாணம் அவள் கண்ணையும் காதையும் இருட்டுகிறது. ஏதோ செய்யக் கூடாத தவறைத் தான் செய்துவிட்டது போன்ற உணர்ச்சி அவள் இருதயத்தைப் பிடித்து ஆட்ட, வேறொன்றும் தோன்றாமல், ஓட்டமாக ஓடித் தன் குடிசைக்குள் புகுந்து கொள்கிறாள்.

அவன் அவளைக் கண்டான்: அவள் ஓட்ட அழகைக் கண்டான்; அவளது தோற்றம் அழியா ஓவியமாக அவன் உள்ளத்தில் பதிந்து விடுகிறது, தாங்க முடியாத பளுவைத் தாங்கிச் செல்வது போல், அவள் பற்றிய நினைவோடு செல்கிறான்.

மறுநாள் ஊஞ்சலாடிக்கொண்டிருக்கிறாள். தற்செயலாக வேலிப்பக்கம் திரும்புகிறாள். அங்கே ஆணழகன் ஒருவன் நின்றுகொண்டிருக்கிறான். இளைஞன் ஒருவனின் தோற்றத்தைக் கண்ட அவள் அச்சத்தால் திகிலடைகிறாள். யார், எதற்காக நிற்கிறான் என்று

கூர்ந்து பார்க்க முயலும்போது, முதல் நாள் வந்த இளைஞனே மீண்டும் வந்துள்ளான் என்பதை உணர்கிறாள். அவன் யானையின் அடிகளைத் தொடர்வது போல் பாசாங்கு செய்கிறான்; அவன் கண்களில் அன்பு வழிவதையும், அது தன்னிடமே வந்து பாய்வதையும் அறிகிறாள். தன்னை விரும்பும் நிலையில் ஆணழகன் ஒருவன் நிற்கிறான் என்ற உணர்வு, அவளை எங்கெங்கோ கொண்டுபோய் நிறுத்துகிறது. ஒருவனால் மதிக்கப்படும் உயர் படிக்கட்டுகளில், தான் ஏறி நிற்கும் நிலையை எண்ணி உள்ளுக்குள்ளே மகிழ்கிறாள்; பெருமிதங் கொள்கிறாள். அந்த இளைஞன் தன்னைப் பார்த்துக் கொண்டிருப்பதை வேறு யாரேனும் பார்க்கிறார்களோ என்று அச்சத்தால் சுற்றுமுற்றும் விழித்துப் பார்க்கிறாள். குடிசையிலிருந்து தந்தையோ, தாயோ பார்த்து விடுகிறார்களோ என்று திரும்புகிறாள். இதற்கிடையிலெல்லாம் கடைக்கண்ணால் அந்த இளைஞனைப் பார்த்துப் பார்த்து, அவன் அழகைக், கண்ணால் பருகுகிறாள். அவனோ அவ்வணங்கின் அழகை, விடாமல், வைத்த விழி எடுக்காமல் உறுஞ்சிக் கொண்டேயிருக்கிறான். அந்த இடத்தை விட்டு அகன்று போய்விடுவோமா என்று எண்ணுகிறாள். "இல்லை, இன்னும் சிறிது நேரம் இருந்து விட்டுப் போ" என்று அவள் மனம் கூறுகிறது அவனை அவ்விடம் விட்டு அகன்று போ என்று அதட்டிக் கூறவும் முடியவில்லை; தானே அகன்று போகவும் இயலவில்லை. அவனை நேராகப் பார்க்க முயலுகிறாள்; அப்போதெல்லாம் அவன் தன் கண்களால் அவளுடைய கண்களைக் கவ்வுகிறான். அக்கவ்வுதலினின்றும் தன்னைக் காப்பாற்றவேறு பக்கம் வேறு எதையோ பார்க்க முயலுவதுபோல் திரும்பிவிடுகிறாள். எனினும் கடைக்கண் பார்வை அவனிடம் சென்று கொண்டுதானிருக்கிறது. இப்படி இருவர் கண்களும் காதல் வலையை நெய்துகொண்டிருக்கும் போது, குடிசையிலிருந்து மகளை விளிக்கும் தாயின் குரல் கேட்கிறது. உடனே அச்சம் அவளைப் பிடித்துத் தள்ள குடிசை நோக்கி ஓடுகிறாள்; ஓடும்போது ஆசை அவனை பார்க்கத் தூண்டுகிறது. நின்று ஒரு பார்வை செலுத்திவிட்டு ஓடிக் குடிசைக்குள் மறைகிறாள். அவள் சென்ற வழிமேல் விழியைச் செலுத்தி அசைவற்ற மரம் போல் நிற்கிறான். அந்தத் தலைமகன் உயிரோவியம் மறைந்துவிட்டது என்ற உணர்வு வந்தவுடன் தன்வழி ஏகுகிறான்.

அவன் மீண்டும் வந்து வந்து போகிறான்; அவளும் கண்டு கண்டு திரும்புகிறாள். கண்கள் நன்றாகப் பேசிக் கொண்டன! தன் மீது கொண்ட காதலன்பால் அவ்வாணழகன் எவ்வளவு வருத்தமுறுகிறான் எனபதை உணர்கிறாள்; அவன் மீது இரக்கங் கொள்கிறாள்; அவன் அன்புக்கு இரையாகி அவன் வருத்தத்தைப் போக்கவும் உறுதிகொள்கிறாள். ஆனால் வாய் திறந்து ஒரு சொல்கூடத் தெரிவிக்கவில்லை. அவன் தன் குறையைக் கூறுவான், கூறினபின் குறை போக்கலாம் என்று அவள் எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கிறாள். தானே வாய் திறந்து கேட்கலாமா என்று எண்ணுகிறாள்; அதற்குள் நாணம் அவளைத் தடுத்து நிறுத்துகிறது. இப்படியாகப் பல நாட்கள் கழிகின்றன.

* * *

நீண்ட நாட்களுக்குப் பிறகு ஒருநாள், தன் உள்ளத்தில் சுமந்துகொண்டிருக்கும் ஒரு செய்தியை, அத்தலைவி, தன் தோழி ஒருத்தியிடம் சொல்வதன் மூலம் ஆறுதலையும், ஆதரவையும் பெற முயலுகிறாள். தனது நெருங்கிய தோழியோடு மாந்தோப்பின் மூலையில் தனித்திருக்கும் வாய்ப்பு எற்படுகிறது. அப்பொழுது அந்தத் தலைவி தோழியிடம் கூறுகிறாள்:

"தோழி! நான் கூறுவதை நீ சற்று ஆராய்ந்து பார். ஒரு தலைமகன், யானை முகலியவற்றின் அடியைத் தேடுவான்போல என்னிடம் வந்தான். என்னைக் கண்டு காதல் கொண்டான். கொண்ட காதலை என்னிடம் கூறுதவனாய் நாள்தோறும் வந்து சென்றான். தான் கொண்ட நோய் என்ன என்பதை நான் புரிந்து கொள்ளும்படி, என்னைப் பார்த்து விட்டுச் செல்லுவதிலேயே ஈடுபட்டிருந்தான். பலநாளும் அவன் வந்து போவதைக் கண்ட நான், அவனைப்பற்றியே நினைப்புடையவளானேன்; இரவில் நான் சிறிதும் தூக்கம் பெறவில்லை; அவனோ தன் குறையை வாய்திறந்து என்னிடம் கூறவில்லை. எனக்கோ அவனை நோக்கி 'உன்னுடைய வருத்தத்திற்கு நானும் வருந்துகிறேன்' என்று கூற நாணம் இடம் தரவில்லை. ஆனாலும் இந்த நிலை நீடித்துக் கொண்டே போமேயானால், அவன் இறந்துபடுவானோ என்று கவலைகொண்டு, நாணமற்ற

# நாய்கள்

மனிதனுடைய நாகரிக வளர்ச்சியில், பழக்கப்படுத்தப்பட்ட விலங்குகளும் மிகச் சிறந்த பங்கினைப் பெறுகின்றன.

மனிதன் விலங்கோடு விலங்காய் வாழ்ந்த காலம் ஒன்றிருந்தது. விலங்குகளை அடக்கி ஆளக் கற்றுக்கொண்ட நாளிலிருந்து, மனிதன் நாகரிகத்தின் படிக்கட்டுகளிலே விரைந்து ஏறத் தலைப்பட்டான் என்று கூறலாம். விலங்குகளின் ஒத்துழைப்பு இல்லாமலிருந்திருந்தால், மனிதன் மிக மெதுவாகத்தான் வளர்ந்து வந்திருப்பான்.

மனிதனின் அடக்கி ஆளும் திறமைக்குக் கட்டுப்பட்டு, மனிதனுக்குப் பயன்படும் வகையில் பழகி வந்த விலங்குகள் வெள்ளாடு, செம்மறியாடு, நாய், எருமை, பசு, எருது, கழுதை குதிரை, யானை முதலியவைகளாகும்.

வரலாற்றுக் காலத்துக்கு முன்பு, நமது முன்னோர்கள், ஆரம்ப காலத்தில் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்து வேட்டையாடித் திரிந்து வந்தனர். பல காலஞ் சென்ற பிறகு அலைந்து திரிவதை விட்டு விட்டு, ஓரிடத்தில் கூட்டமாகக் குடியேறிக் கூடி வாழக் கற்றுக்கொண்டார்கள். அப்பொழுதும் வேட்டையாடி, விலங்குகளைக் கொன்று, உணவாக அருந்தி வந்தார்கள் என்றாலும், விலங்குகளின் குட்டிகளை ஆசையின் காரணமாகப் பிடித்து வளர்க்க ஆரம்பித்தனர். அடங்க நடக்கக் கூடிய விலங்குகளை வைத்துக்கொண்டனர்.

---

செயல் ஒன்றைச் செய்தேன். நான் ஒருநாள் தினைப்புனத்துப் பக்கத்திலே ஊஞ்சலாடிக் கொண்டிருந்தபோது, அந்தத் தலைவன, அங்கு வழக்கம் போல் வந்தான். நான் நாணம் இழந்து, 'ஐயனே! சிறிது பொழுது என்னை ஊஞ்சலாட்டு' என்று கேட்டுக்கொண்டேன். அதுகேட்டவுடனே, அவன் புத்துயிர் பெற்றவன்போல் மகிழ்ச்சியால் மாறி, 'பெண்ணே! நீகூறியது போலவே செய்கிறேன்' என்று ஊஞ்சலாட்டினான். அப்பொழுது நான் கை நழுவி விழுவதுபோல் அவன் கருதும்படி, அவர் மார்பில் வீழ்ந்தேன். அதனை அவன் உண்மையாகக் கருதி, என்னை விரைவாகத் தூக்கி எடுத்து அணைத்துக்கொண்டான். நான் 'பிறர்யாரேனும் பார்த்து விடுவார்கள்' என்று சொல்லிப் போக அவசரப்பட்டேன். 'அப்படியானால், நீபோ, கண்ணே' என்று கூறி, கனிந்த பார்வையை என்மீது செலுத்தினான். அந்தப்பார்வையில் மெய்ம்மறந்து நான் அவன் மீது கிடந்தேன்.''

* * *

கலித்தொகை தரும் காட்சிகளிலே ஒன்றுதான் மேலே தீட்டபபட்டிருப்பது. குறிஞ்சிக் கலியின் முதல் செய்யுள் தீட்டிக் காட்டும் சொல்லோவியந்தான், மேலே, இறுதியில் தலைவி தோழிக்குச் சொல்லுவதாக வந்துள்ள பகுதி.

இந்தக் காட்சியை நல்ல சூழ்நிலைக்கிடையே காட்டவேண்டும் என்ற எண்ணத்தால் சேர்க்கப்பட்ட கற்பனையே, முன்னால் சொல்லியிருக்கும் பகுதியாகும்.

தன்னுடைய எண்ணத்தைத் தோழியின் மூலம் தன் தாய் தந்தையர்கள் உணர்ந்து, அந்த இளைஞனுக்கே தன்னை மண முடித்து வைக்க வேண்டும் என்பது தலைவியின் உள்ளக் கிடக்கை. தன்னுடைய உள்ளத்தை அறியாமல், தாய் தந்தையர்கள் தன்னை வேறு யாருக்கேனும் மணம் செய்து வைக்க முனைந்து விடுகிறார்களோ என்று அஞ்சி, அப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்படுவதற்கு முன்னாலேயே, தன் கருத்தைத் தாய் தந்தையர்கள் அறிந்து விடுவது நல்லது என்ற எண்ணத்தால், தலைவி, தன் தோழிக்கு முதலில் செய்தியை வெளியிடுகிறாள். பிறகு தோழி தாய் தந்தையர்க்குச் சொல்லுவாள்; தாய் தந்தையர்கள் வேறு வழியின்றி மகளின் விருப்பத்திற்கு இசைந்து மணம் முடித்து வைப்பர் என்பது நோக்கம்.

பண்டைக்காலத் தமிழர் எப்படிப்பட்ட உயரிய காதலுக்கு இடமளித்திருந்தனர் என்பதற்கு இந்தக் கலித்தொகைச் செய்யுளே போதுமான சான்றாக இருக்கும். **இரா. நே.**

அடங்க மறுத்த கொடிய விலங்குகளை விரட்டியடித்தும், கொன்று குவித்தும் வந்தனர். அடங்கி நடக்கும் இயல்பினைக் கொண்ட விலங்குகள், பெரியவைகளாகிக், குடும்பங்களாகப் பெருத்து, மக்களுக்குத் 'தோழர்'களாயின.

ஆரம்பத்தில் ஆசையின் காரணமாக வளர்க்கப்பட்ட விலங்குகள், காலப் போக்கில் மனிதனுக்குப் பயன்படுவனவாகவும் ஆயின. வேட்டை கிடைக்காதபோதும், பசி ஏற்படும் போதும் அறுத்துத் தின்ன, தங்களிடத்தே வளர்க்கப்பட்ட ஆடுமாடுகள், பயன்படுத்தப்பட்டன. செம்மறி ஆட்டு மயிரும், வெள்ளாட்டு மயிரும் கம்பளங்கள் நெய்யவும், உடைகள் ஆக்கவும் பயன்பட்டன. தோல்கள் குடிசையின் கூரையாக வேய்வதற்கும், ஆடையாக உடுத்துவதற்கும், செருப்பாகத் தைத்துக் கொள்வதற்கும் எடுத்துக் கொள்ளப்பட்டன. பசுவின் பாலிலிருந்து, தயிர், மோர், வெண்ணெய், நெய் ஆக்கிக்கொண்டனர். சீறிப்பாய்ந்து முரட்டுத்தனமாக நடந்துகொண்ட விலங்குகள் நாளடைவில் அடங்கி ஒடுங்கி மனிதனின் அன்பிற்கு ஆளாகின. அப்படி அன்பிற்கு ஆளான விலங்குகளில் மிக நெருங்கிப் பழகும் பண்புபெற்ற விலங்குகள் நாய்களும் பூனைகளுமாகும். இவையிரண்டிலும் கூட மிக நெருங்கிப் பழகுவது நாய்தான்.

நாய் மனிதனுக்கு நெருங்கிய நண்பன் மட்டு மல்லாமல், சிறந்த காவலாளியாகவும் இருந்து தன்னை வளர்ப்பவனிடம் இறுதி வரையில் நன்றி காட்டிவரும் அறிவுடைய விலங்காகும். ஆட்டு மந்தைகளைக் காவல் காக்க மிகப்பழைய காலந் தொட்டு நாய்மிகவும் பயன்பட்டு வந்திருக்கிறது. வேட்டைக்கான விலங்குகளைத் துரத்தி மடக்கவும், கவ்விப்பிடிக்கவும், தொலைவில் கொன்று வீழ்த்தப்பட்ட பறவை-விலங்குகளை எடுத்து வரவும் நாய்கள் நல்ல வேலைக்காரர்களாகப் பணி புரியும் தன்மையன.

பழம்பெரும் காலம் முதல், வீட்டு நாய்கள் எல்லா நாடுகளிலும் நன்கு பேணி வளர்க்கப்பட்டுவந்துள்ளன. பழைய காலத்து எகிப்தியர்கள் நாயை மிகவும் போற்றியதோடு, கடவுளாக வைத்துக் கூட வழிபட்டு வந்தனர். நாய்த்தலையோடு கூடிய மனித உருவம் அனுபிஸ் (Anubis) என்ற கடவுளாக அவர்களால் அழைக்கப்பட்டு வந்தது. ஒரு மனிதன் இறந்து விட்டால் அவனது 'உயிர்' வேறு ஒரு விலங்கின் உடலில் புகுந்து விடும் என்று அக்காலத்திய எகிப்திய மக்கள் நம்பி வந்தனர். அக்காரணம் பற்றி ஒரு மனிதன் இறந்து போகும் தறுவாயில், ஒரு நாயைப் பிடித்து இறக்கும் மனிதனின் வாயொடு பொருத்தி வைப்பார்களாம். ஏனென்றால். அந்த மனிதனுடைய நல்ல பண்புகள் அவன் சாவோடு பட்டுப்போகாமல், நாயினுடைய உடலில் நின்று நிலைபெறும் என்பது அவர்களது நம்பிக்கை. இந்தியாவில் இந்து மதத்தினர் நாயை ஆண்டவனாகவே மதித்துத், தொழுதுவரும் பழக்கம் பலகாலமாக இருந்துவருகிறது. **வயிரவர்** என்ற கடவுள் ஏறிச் செல்லும் வாகனமாக **நாய்** புராணத்தில் கருதப்படுகிறது. மிகப் பழைய நாளில் கிரேக்க நாட்டுமக்களும், ரோம் நாட்டுமக்களும் நாயினுடைய ஊனைத் தின்பார்களாம். அதனால் தங்களுக்கு மிக்க வலிவுண்டாகும் என்பது அவர்களுடைய எண்ணம். பண்டைய எதியோப்பிய நாட்டில்,

அல்சாஸ்டியன் நாய்

மக்கள் தங்களுடைய அரசனை ஏதாவதொரு விலங்கைத் தேர்ந்தெடுத்துக் கொள்வார்களாம். பெரும்பாலும் நாயே அரசனாகத் தேர்ந்தெடுக்கப் படுமாம். அந்த 'நாய் அரசனின்' தேவைகளைக் கவனிக்கப் பணியாட்களும் அதிகாரிகளும் நியமிக்கப் படுவார்களாம்.

நாய்கள் உலகில் பலவகை இருக்கின்றன. நாட்டுக்கு நாடு, இடத்திற்கு இடம், தட்ப வெட்ப நிலைக்கு ஏற்ப, உள்ளது சிறத்தல் (Evolution) முறைக்கு ஒப்ப பலவிதமாகத் தோற்றமளிக்கின்றன.

இங்கிலாந்தின் முதலாம் சார்லஸ் மன்னன், தனக்கென்று ஒருவகை நாயை உரிமையாக்கிக் கொண்டான்.

அது அவன் பெயராலேயே அழைக்கப் பட்டது. அந்த வகை நாய்க்கு அவன் காலத்தில் மிக்க கிராக்கி யிருந்தது. பீக்கினீஸ் (Pekinese) என்ற ஒரு வகை இனம் சீனாவில் மட்டுமே வளர்ந்து வந்தது. உலக நாய்களிலே மிகச் சிறந்த இனங்களில் ஒன்றாக அந்த வகை கணக்கிடப்பட்டது. பல காலம் வரையில் அந்த இனத்தை வேறு எந்த நாட்டிலும் காண முடியாமலே இருந்து வந்தது. அந்த இனத்தை வெளி நாட்டுக்கு எடுத்துச் செல்வதே குற்றம் என்று கூறப்பட்டுக் கடுந் தண்டனையும் விதிக்கப்பட்டிருந்ததாம். கி. பி. 1860-ம் ஆண்டில் பீகின் நகரிலிருந்த 'கோடை அரண்மனை' கைப்பற்றப்பட்ட நேரத்தில், அந்த இனத்தைச் சேர்ந்த ஐந்து நாய்கள் ஆங்கிலேயர்களால் கள்ளத்தனமாக இங்கிலாந்துக்கு முதன் முதல் கடத்திச் செல் லப்பட்டதாம். அவைகளில் ஒன்று விக்டோரியா பேரரசியாருக்கு அன்பளிப்பாக வழங்கப் பட்டதாம்.

கான்யூட் அரசன் காலத்தில் சாம்பல் நிற முள்ள வேட்டை நாய்கள் மிக விலையுள்ளன வாக இருந்து வந்தன. அவைகளைப் பிரபுக்கள் தவிர வேறு எவரும் வைத்துக்கொள்ள அனு மதிக்கப்படவில்லை. சாம்பல் நிறமுள்ள வேட்டை நாய்களைத் தவிர, பிற நாய்கள் அரச னுடைய காடுகளில் உலாவக்கூடாது. அப்ப டியே உலாவினாலும் அவற்றினுடைய கால் விரல்கள் வெட்டப்பட்டு விடப்பட்டிருக்கும். அவைகள் வேட்டையில் கலந்து கொள்ளக் கூடாது என்பதே கருத்து. இங்கிலாந்தை ஆண்ட இரண்டாம் ஹென்றி மன்னன் நாய் வளர்ப்பதில் மிக்க விருப்பமுடையவனாக இருந்து வந்தான். அவன் தேம்ஸ் நதிக்கரை யில் நாய்களை வளர்ப்பதற்கென்று தனியாக ஒதுக்கி வைத்திருந்த இடம் 'நாய்களின் தீவு' (Isle of dogs) என்று இன்றும் வழங்கப்படு கிறது.

வடகோடிப் பனிக்கட்டிப் பகுதிகளில் வாழும் எஸ்கிமோயர்கள், 'எஸ்கிமோ நாய்' என்ற ஒரு இனத்தைப் பயன்படுத்தி வருகின் றனர். எஸ்கிமோ நாய்கள் ஸ்லெட்ஜ் என்னும் உருளையில்லா வண்டிகளைப் பனிக்கட்டியில் இழுத்துச் செல்லும். வண்டியில் பளு மிகவாக ஏற்றப்பட்டிருந்தால், பல நாய்கள் வண்டியில் இணைக்கப்படும்; நாள் ஒன்றுக்கு நாற்பது மைல்கள் வரை வண்டியை இழுத்துச் செல் லும் ஆற்றல் படைத்தவை அவை.

செயின்ட் பெர்னார்ட் என்ற மலையில் வளர்க் கப்படும் நாய்கள், வழிதவறிப் போனவர்களை அழைத்து வரவும், காணாமற் போனவர்களைத் தேடி வரவும் பழக்கப்படுத்தப்பட்டிருக் கின்றன.

நாய்களில் மிகவும் அறிவுடையன அல்சாஸ் டியன் (Alsastian) என்ற இனமேயாகும். அவைகள் போலீஸ் நாய்களாக எங்கும் பயன்படுத்தப்படுகின்றன. திருடர்களையும், மறைந்து ஒளிந்து இருப்போரையும் கண்டு பிடித்துக் கொடுக்க அல்சாஸ்டியன் பேருதவி யாக இருந்து வருகிறது.

'இரத்த வேட்டைகள்' என்ற நாய்கள் மிக வும் மூர்க்கத்தன முடையன வென்றும், அவைகள் மனிதர்களைக் கண்டமாத்திரத்தி லேயே கொன்றுவிடும் என்றும் பலர் கருதிக் கொண்டிருக்கிறார்கள். எதிரிகள் என்றறியும் போதுதான் 'இரத்த வேட்டை' மூர்க்கத்தன மாக மாறுமே ஒழிய, இல்லாவிடில் யாவரோ டும் அன்பாகத்தான் பழகும். வாசனையின் மூலம் பொருள்களை அறிந்துகொள்ளும் அறிவு அதனிடத்தே மிகவுண்டு. அந்த அறிவு காணா மற்போன பொருள்களையும், ஓடிப்போன மனி தர்களையும் கண்டுபிடிக்க உதவி செய்கிறது. ஓடிப்போன ஒருவனை அது கண்டுபிடித்துவிட் டால், உடனே அவன் மீது பாய்ந்து அவனைக் கொன்றுவிடாது; அவன் பக்கத்தில் நின்று கொண்டு ஒருவித ஊளை[illegible] அதன் மூலம் அவன் இருப்பிடத்தைத் தேடுவோர் அறிந்து கொள்வார்கள்.

தமிழகத்தில் மிகவும் பேர்போன நாய்கள் இராஜபாளையம் நாய்களும் கோம்பை நாய்களு மாகும்.

விலங்குகளிலே நன்றி காட்டுவது நாய் ஒன்று தான். தான் இறந்துபட நேரிடினும், தன்னைக் காப்பாற்றி வரும் தன் தலைவன் காக்கப்பட வேண்டும் என்ற நன்றியுள்ளம் படைத்தது. மனிதன் அதனிடத்துக் கற்றுக்கொள்ள வேண்டிய சிறந்த பாடம் நன்றி!

Regd. No. M 6296

# தி. மு. க. 2-வது
# மாவட்ட மாநாடுகள்

இராமநாதபுரம் மாவட்டம்

**விருதுநகரில் ஜூன் 27, 28**
**சனி, ஞாயிறு கிழமைகளில்**
**நடைபெறும்.**

## 27-6-53 பெண்கள் மாநாடு

தலைவர்:— தோழியர்,
**அருண்மொழி பி. ஓ. எல்.**

துவக்குபவர்:—தோழியர்
**அ...ஸ்கரின்ஸ் எம். பி.**

பெண்கள் பலர் சொற்பொழிவாற்றுவார்கள்

தோழர் டி. கே. ராஜா எம். எல். ஏ. தலைமையில்
கே. ஆர். ராமசாமி குழுவினரின்

**'ஜமீன் மாளிகை'**

நாடகம் நடைபெறும்.

## 28-6-53 அரசியல் மாநாடு

துவக்குபவர் :—தோழர்
**எம். எஸ். சிவசாமி**

அறிஞர் அண்ணாவும் மற்றும் பலரும் கலந்து கொள்வர்.

தோழர் ... இரங்கசாமி
தலைமையில் கருணாநிதிக் குழுவினரின்

**'பரப்பிரம்மம்'**

நாடகம் நடைபெறும்

நுழைவுக் கட்டணம் இரண்டு நாட்களுக்கும்

வரவேற்பாளர் ரூ. 5 பிரதிநிதி ரூ. 3.
பார்வையாளர் ரூ. 1 பெண்களுக்கு அணா 8

சாப்பாட்டு கட்டணம் நாளொன்றுக்கு ரூ 1-8-0

தென்னார்க்காடு மாவட்டம்

**சிதம்பரத்தில்**
**ஜூலை 4, 5 சனி ஞாயிறு கிழமைகளில்**
**நடைபெறும்.**

## 4-7-53
## சமுதாய சீர்திருத்த மாநாடு

தலைவர் :—தோழர் க. அன்பழகன் எம். ஏ.

துவக்குபவர் :—தோழர்
**சி. வி. எம். அண்ணாமலை**

## 5-7-53
## அரசியல் மாநாடு

தலைவர் :—தோழர் சி. பி. சிற்றரசு

துவக்குபவர் :—தோழர்
**இராம அரங்கண்ணல்**

அறிஞர் அண்ணாவும், மற்றும் பலரும் இரண்டு நாட்களிலும் கலந்துகொள்வர்

மாநாட்டு ஓவியக் கண்காட்சியைத் தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் திறந்து வைப்பார்.

தோழர் கே. ஆர். இராமசாமிக் குழுவினர் நடிக்கும்

**'காதல் ஜோதி'**

நாடகமும்,

அறிஞர் அண்ணாவும் கழகத் தோழர்களும் நடிக்கும்

**'சந்திரோதயம்'**

நாடகமும் நடைபெறும்.

நுழைவுக் கட்டணம் இரண்டு நாட்களுக்கும்

வரவேற்பாளர் ரூ. 5. பிரதிநிதி ரூ. 3.
பார்வையாளர் ரூ. 1. பெண்களுக்கு அணா 8.

**ஜூலை 11, 12, தேதிகளில் சென்னையில் மாநாடுகள் நடைபெறும்.**

**ஜூலை 25, 26, தேதிகளில் மதுரையில் மாநாடுகள் நடைபெறும்.**

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M. A.,
at MANRAM ACHAKAM at 26, Nainiappan St, Mannadi, MADRAS-1.